# விடுதலைப்புலிகள்

குரல் 20 | தை 1991 | அன்பளிப்பு: 7 ரூபா

# இந்தியாவின் புதிய தலையீடு தமிழர் நலனைப் பாதிக்குமா?

**பிரேமதாசா அரசை அரவணைத்து, மீண்டும் நல்லெண்ணத்தையும், நட்புறவையும் வளர்த்துக்கொள்ள, டில்லி ஆட்சி பீடம் விரும்புகிறது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை புதுப்பித்து அல்லது ஒரு புதிய நட்புறவு ஒப்பந்தத்தைச் செய்து, இலங்கைத் தீவை தனது வல்லாதிக்க வியூகத்திற்குள் வைத்துக்கொள்வதே இந்தியாவின் புதிய ராஜதந்திர தலையீட்டின் அந்தரங்க நோக்கமாக உள்ளது.**

நீண்ட காலமாக, அதாவது சென்ற ஆண்டு பங்குனி மாதம் தனது ஆக்கிரமிப்பு இராணுவத்தை தமிழீழ மண்ணிலிருந்து திருப்பி அழைத்துக் கொண்டதிலிருந்து குழம்பிப் போய் ஒதுங்கியிருந்த இந்திய அரசு, மீண்டும் இலங்கை விவகாரத்தில் தலையிட முனைந்துவருகிறது. இந்த ராஜதந்திர தலையீட்டின் ஆரம்ப கட்டமாகவே இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. சுக்லா கொழும்புக்கு விஜயம் செய்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தால் இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஆட்டம் கண்டு போயிருக்கும் சிங்கள அரசு, மீண்டும் இந்திய ஆளும் வர்க்கத்துடன் கை கோர்த்துக் கொள்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்தியாவுடன், தான் ஏற்படுத்திக் கொள்ளும் புதிய நட்புறவை தமிழீழ மக்களுக்கு எதிரான இனப் படுகொலையை மூடி மறைக்கும் ஒரு ராஜதந்திர கேடயமாக சிறீலங்கா அரசு பயன்படுத்தலாம்.

சீனா, பாகிஸ்தான் போன்ற இந்தியாவின் பகைமை நாடுகள் பிரேமதாசா அரசுக்கு ஆயுத உதவியை வழங்கி நெருக்கமான நட்புறவை வளர்த்துள்ளன. இது ஒருபுறமிருக்க அவுஸ்திரேலியா, கனடா, பிரிட்டன், நோர்வே, சுவீடன் போன்ற நாடுகள் தமிழர் பிரச்சினையில் குறுக்கிட்டு மத்தியத்துவம் வழங்க முன்வந்துள்ளன. இந்தியாவை அந்நியப்படுத்தக்கூடிய இப்படியான புதிய திருப்பங்களால் அச்சம் கொண்ட இந்திய அரசு மீண்டும் இலங்கைத் தீவின் விவகாரத்தில் தலையிடத் தீர்மானித்திருக்கிறது. கொழும்புக்கு திரு. சுக்ளாவை அனுப்புவதற்கு முன்னராக பிரேமதாசா அரசைத் திருப்திப்படுத்தும் நோக்குடன் இந்திய அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராக சில நடவடிக்கைகளை எடுத்தது. தமிழ் நாட்டில் சிகிச்சைபெற்று வந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் கைதுசெய்யப் பட்டதும், பாராளுமன்றத்தில் இந்தியப் பிரதமர் சந்திரசேகர் புலிகளுக்கு எதிராக அபாண்டமான குற்றச்சாட்டுகளை முன்வைத்ததும் சகலரும் அறிந்ததே. இந்தியாவின் புதிய ராஜதந்திர முயற்சிக்கு முன்னோடியாக, சிங்கள பேரினவாதத்திற்கு விடுக்கப் பட்ட நல்லெண்ண சமிக்கைகளாகவே நாம் இதனைக் கருதுகிறோம்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்திலுள்ள சில விதிகளைத் தான் இறுக்கமாக கடைப் பிடிப்பதாக இந்திய அரசு சிறீலங்காவுக்கு எடுத்துக்காட்டியிருக்கிறது. இந்த நடவடிக்கைகளைப் பார்க்குமிடத்து இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை புதுப்பித்துக்கொள்ள இந்தியா விரும்புகிறது என்பது தெளிவாகிறது.

ஆயினும் இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் பாதுகாப்பு விடயம் குறித்து சந்திரசேகர் அரசு மௌனம் சாதிக்கிறது. தமிழ் மக்களுக்கு எதிராக நடாத்தப்படும் இனக்கொலை பற்றியும் இந்திய அரசு மௌனம் சாதிக்கிறது. பிரேமதாசா அரசை எவ்வகையிலும் புண்படுத்தாது, சிறீலங்காவின் அட்டூழியங்களை நியாயப்படுத்தும் வகையில் இந்தியாவின் புதிய ராஜதந்திரம் அமைந்திருக்கின்றது.

ரஜீவ் காந்தி காலத்து இந்திய வெளியுறவுக் கொள்கையாலும், அரசியல், ராஜதந்திர, இராணுவ தலையீடுகளினாலும் தமிழீழ மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். ரஜீவ் ஆட்சிப்பீடத்தின் அணுகுமுறை தவறானது என்பதை இந்திய மக்களும், சர்வதேசச் சமூகமும் ஒப்புக்கொண்டார்கள்.

மீண்டும் அத்தகையதொரு வரலாற்றுத் தவறைச் செய்ய முனைவதையே, தற்போதைய இந்திய மத்திய அரசின் ராஜதந்திர முயற்சிகள் காட்டுகின்றன.

★ சிங்களப் பாடசாலையில் உயர்தரப்பரீட்சை, தமிழீழ பாடசாலையில் பீப்பாய்க் குண்டு.

★ தென்தமிழீழ மாணவர் காட்டில், சிங்கள - முஸ்லீம் காடையர்கள் நாட்டில்.

# மாணவர்களின் மாபெரும் எதிர்ப்பு ஊர்வலம்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மாணவர்களில் பெரும்பகுதியினர் ஒன்றுசேர்ந்து நடாத்திய மிகப்பெரியதும், எழுச்சியூட்டக் கூடியதுமான மாணவர் போராட்டம் இதுவாகும். தமிழ் இன அழிப்பிற்கெதிராகவும், தமிழீழமாணவர்கள் மீதான கல்வி அடக்குமுறைக்கெதிராகவும், மாணவர்கள் ஒன்றுதிரண்டிருந்தார்கள். சுமார் 15,000 மாணவர்கள் பங்குகொண்டிருந்த இப்பேரணி, ஏறக்குறைய மூன்று மைல் நீளத்தைக் கொண்டிருந்தது.

உலங்கு வானூர்தி ஒன்றின் பயமுறுத்தலுக்கு மத்தியிலும், உறுதியுடன் எதையும் சந்திக்கத் தயாரான நிலையில் பேரணியில் பங்குகொண்ட மாணவர்கள் இருந்தார்கள்.

அடக்குமுறைகளுக்கெதிராக மாணவர்கள் மத்தியில் தோன்றியுள்ள போர்க்குணத்தின் குறியீடாகவே இந்த ஊர்வலம் மிளிர்ந்தது. இது எமது விடுதலைப் போராட்டத்தில் ஒரு மாணவர்களின் எழுச்சிக்கட்டத்தை இனங்காட்டுகின்றது.

16. 1. 1991 அன்று யாழ். குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களினால் கல்வி அடக்குமுறைகளை எதிர்த்தும், தமிழ் இன ஒழிப்பிற்கெதிராகவும் ஒரு பிரமாண்டமான எதிர்ப்பு ஊர்வலம் நடாத்தப்பட்டது. காலை 9. 30 மணிக்கு சுண்ணாகத்திலிருந்து ஆரம்பமாகிய இச் சைக்கிள் பேரணி பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். செயலகத்தில் முடித்து வைக்கப்பட்டது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட சில உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களிடம் ஆறு கோரிக்கைகள் அடங்கிய மகஜரை மாணவர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

போக்குவரத்துக்கு இடையூறு இல்லாதவாறு பதாகைகளை கையிலேந்தி பல்வேறு கோசங்களை எழுப்பியபடி

( 11 ஆம் பக்கம் பார்க்க )



ஊர்வலத்தில் பங்குபற்றிய மாணவர்களில் ஒருபகுதியினர்

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# புலிகளின் குரல்

## போர்வெறிகொண்ட பிரேமதாசவின் அரசு

கடந்த 7 மாதகாலமாக தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தப்போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து, பேச்சுக்கள் மூலம் சமாதானத்தை நிலைநாட்டவிரும்பி, ஒருபக்கச்சார்பானயுத்தநிறுத்தம் ஒன்றை நாம் பிரகடனப்படுத்தியிருந்தோம்.

*31.12.1990* நள்ளிரவில் இருந்து காலவரையறையற்ற போர்நிறுத்தமாக அது அறிவிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருக்கின்ற, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலம் அந்த நல்லெண்ணச் செய்தியை சிறீலங்கா அரசுக்கு அனுப்பி வைத்திருந்தோம்.

தமிழீழ - சிறீலங்கா போரை நிறுத்தி, பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண, சர்வதேச சமூகம் விடுத்த கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கு முகமாகவும்,

காட்டுமிராண்டித்தனமான இன அழிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கும் தென்தமிழீழ மக்களுக்கு ஒரு நிவாரணத்தை வழங்கவும்,

சிங்களப்படைகளும், முஸ்லீம் கும்பல்களும் புரிந்த தமிழ் இனப்படுகொலையை உலகிற்கு அம்பலப்படுத்தவும்,

சிறீலங்கா அரசின் போர் வெறியை சர்வதேச சமூகத்துக்கு நிரூபிக்கவும் வேண்டி இந்தப் போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டிருந்தோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக பேச்சுக்கள் மூலம் இத்தீவின் இனப்பிரச்சனையைத் தீர்க்க, அரியதொரு சந்தர்ப்பத்தையும் சிறீலங்கா அரசிற்கு வழங்கியிருந்தோம்.

ஆனால், நாம் எதிர்பார்த்தபடியே சிறீலங்கா அரசு எமது நல்லெண்ணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

முதலில்; '' மூன்றுநாட்கள் போர் ஓய்வைக் கடைப்பிடிக்கப் போகின்றோம்'' என இராணுவத் தலைமைப்பீடம் அறிவித்தது.

அதன்பின்னர்; '' ஒரு வாரம் ஆயுத நடவடிக்கைகளை நிறுத்தப் போகின்றோம் '' என சிறீலங்கா அரசும் அறிவித்தது.

ஆனாலும், மேற்குறித்த பத்து நாட்களிலும் சிங்களப்படைகள் போர் நிறுத்தத்தை ஒரு பொருட்டாகக் கருதவேயில்லை.

தென் தமிழீழத்தில், அப்படி ஒரு போர் ஓய்வு இருந்ததை உணரவே முடியவில்லை, மக்களைக் கைது செய்து துன்புறுத்தலையோ, மக்களின் வீடுகளைக் குண்டுவைத்துத் தகர்த்தலையோ, கொலை - கொள்ளைகளில் ஈடுபடுவதையோ சிங்களப்படைகள் கைவிடவில்லை.

அத்துடன், தமிழீழம் முழுவதிலும் எமது போராளிகளைச் சண்டைக்காக, சீண்டிக்கொண்டே இருந்தார்கள்.

வடதமிழீழத்தில், இராணுவ முகாம்களைச் சூழ காவல் அரண்களில் இருந்தபடி போர்நிறுத்தத்தைக் கடைப்பிடித்த எமது போராளிகள் மீது எறிகணைத்தாக்குதல்களையும், துப்பாக்கிப் பிரயோகங்களையும் அடிக்கடி மேற்கொண்டபடியே இருந்தார்கள். இதனால் ஆனையிறவில் எமது போராளி ஒருவர் ( கப்டன் அமலன் ) கொல்லப்பட்டார். இன்னுமொருவர் காயமடைந்தார். பலாலி முகாமைச் சூழ இருந்த சில போராளிகள் ரொக்கட் தாக்குதல்களினாலும், எறிகணைத் தாக்குதல்களினாலும் கடுமையாகக் காயமடைந்தனர்.

நாம் கடைப்பிடித்த போர்நிறுத்தத்தைச் சாதகமாகப் பயன்படுத்திய சிறீலங்கா விமானப்படையின் உலங்கு வானூர்திகள், தாழப்பறந்து, எமது நிலைகளையும், மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களையும், வேவு பார்த்துச் சென்றன.

அப்படியிருந்தபொழுதிலும் யுத்த நிறுத்தத்தை உடைப்பதற்கு ஒரு துப்பாக்கி ரவையைக்கூட நாம் பயன்படுத்தவில்லை.

சண்டையை தொடங்கும்படி பல்வேறுவழிகளிலும் அரசினாலும், அதன் படைகளினாலும் நாம் தூண்டப்பட்ட பொழுதிலும் பொறுமையையே கடைப்பிடித்தோம்.

இந்தநிலையில் *11. 1. 1990* அன்று அதிகாலை வடதமிழீழத்திலிருந்த பலாலி, ஆனையிறவு, முல்லைத்தீவு, தள்ளாடி, வவுனியா ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து எமது போராளிகளை 'நோக்கி மிகப்பெரிய தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இதற்கு போர்விமானங்களும், உலங்கு வானூர்திகளும், இராட்சத அவ்ரோரக விமானங்களும் பயன்படுத்தப்பட்டன.

இவ்விதம் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்ட எமது காவல் அரண்களில் சில, இராணுவத்தின் காவல் அரண்களிலிருந்து 2 கி. மீ. தூரத்திற்கும் அப்பாலேயே இருந்தன.

இராணுவத்தின் தாக்குதல்களிலிருந்து எம்மைப் பாதுகாப்பதற்காக வேண்டி, தற்காப்புத் தாக்குதல்களை மட்டுமே நாம் நடாத்தினோம்.

**[மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் ஒன்றாகிய கிளிநொச்சி நகர்மீது விமானத்தாக்குதல் நடாத்தப்பட்டது. அதில் பத்து பொதுமக்கள் கொல்லப்பட்டனர், ஒன்பது பேர் படுகாயங்களுடன் யாழ்-வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர். இந்தத் தாக்குதல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரது கண்ணெதிரிலேயே நிகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.]**

அதேசமயம் சிறீலங்கா அரசும், விவேகமற்ற - முரட்டுத்தனமான முன்நிபந்தனைகளை வைத்து எமது நேசக்கரத்தை தூக்கியெறிந்தது.

- ஆயுதங்களைக் கைவிடவேண்டும்.
- சீருடைகளைக் களையவேண்டும் என்று யதார்த்தமற்ற முன்நிபந்தனைகளை விதித்தது.

மாறிமாறி வந்த சிங்கள ஆட்சியாளர்கள் செய்த அரசியல் ஞானமற்ற தவறுகளைத்தான், பிரேமதாசாவின் அரசும் செய்துவருகின்றது.

இவர்கள் யதார்த்தங்களைப் புறக்கணித்துவிட்டு, இராணுவ மமதையுடன் காலத்தை ஓட்ட நினைக்கின்றார்கள்.

ஆயுதங்களும் - சீருடைகளும், தமிழீழ மக்களின் உயிரும் - உணர்வுமாக மாறிவிட்ட யதார்த்தத்தை பிரேமதாசா அரசு புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் புரிந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கவும் முடியாது.

அடக்கி வாழ்வதையே மரபாகக் கொண்ட இனவாத அரசும், அடக்குமுறைக்குள் இனி வாழமாட்டோம் என கிளர்ந்தெழுந்த **ஒரு தேசிய இனமுமாக நாங்களும்** இருவேறு துருவங்களில் நிற்கின்றோம்.

விடுதலைப் புலிகளினால் அறிவிக்கப்பட்ட போர் நிறுத்தத்துடன் இலங்கைத் தீவில் சண்டை ஓயப்போகின்றது.. சமாதானம் உருவாகப் போகின்றது என சர்வதேசம் எண்ணியிருந்தது ஆனால், எரிச்சல் ஊட்டக் கூடியதும், விவேகமற்றதுமான முன் நிபந்தனைகளை விதித்து சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் தன்னை ஒரு போர் வெறியனாக சிறீலங்கா அரசு வெளிப்படுத்திவிட்டது.

போரின் கொடுமைகளை அதிகளவில் அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் என்ற பக்கத்திலிருந்து, நல்லெண்ண அடிப்படையில் நாம் விடுத்த யுத்த நிறுத்த அறிவிப்பை, சிங்கள அரசு தவறாக மதிப்பிட்டுவிட்டது.

- புலிகளுக்கு இந்திய அரசு மிகப் பெரிய நெருக்கடிகளைக் கொடுக்கின்றது. இதைச் சாதகமாகப் பயன்படுத்தி புலிகளை நசுக்கிவிட முடியும்; என்றும்,
- வளைகுடாவில் போர்மேகம் கருக் கொண்டிருப்பதால், தான் செய்யப்போகும் தமிழ் இனப்படுகொலையை உலகம் கவனிக்கப் போவதில்லை. எனவே தமிழரை ஒடுக்கி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்க முடியும் என்றும்,
- கடந்த ஏழுமாதகாலப் போர் காரணமாக, மிகப் பெரிய பொருளாதார நெருக்கடிக்குள், புலிகளும், தமிழீழ மக்களும் உள்ளனர். போரைத் தொடர்ந்து நடாத்தினால் புலிகள் பலவீனமான நிலைக்குள் சென்றுவிடுவார்கள். அப்பொழுது அவர்கள்மீது தீர்வுகளைத் திணிக்கமுடியும் என்றும் சிறீலங்கா அரசு மதிப்பிடுகின்றது.

இந்திய அரசு தரும் நெருக்கடிகளும், போர்காரணமாக நாமும், எமது மக்களும், சந்திக்கும் பொருளாதார நெருக்கடிகளும், எமக்குப் புதிதல்ல, இவைகள் எதிர்பார்த்தவைகள்தான்.

எங்களுக்கு, சர்வதேச அரசுகளது குணவியல்புகளும் தெரியும், அவற்றின் அபிலாசைகளும் விளங்கும். உலக ஓட்டத்தின் தன்மைகளும் புரியும். எமது போரிடும் ஆற்றலும் - பொருளாதார வளங்களும், அன்னியரில் தங்கிநிற்கும் தன்மைகள் கொண்டதல்ல.

'' புலிகளைக் கொன்று ஆழப் புதைப்பதற்காக கிடங்கு வெட்டுகின்றோம் '' என சிறீலங்கா அரசு நினைக்கின்றது. ஆனால் அங்கிருந்து பூதம் புறப்படப்போகின்றது என்பதை நடைமுறையில் கண்டுகொள்ளும்.

# தமிழீழப் பத்திரிகைகள் எங்கே நிற்கின்றன?

''கருத்துக்கள்'' மக்களின் சிந்தனைகளையும், செயற்பாடுகளையும் நிர்ணயிக்கும் அபார சக்தி படைத்தவை. இந்தக்கருத்துக்களை உற்பத்திசெய்யும் சாதனங்களில், பத்திரிகைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. பத்திரிகைகள் உற்பத்திசெய்யும் கருத்துக்கள், சமுதாயத்தின் எண்ணவோட்டத்தை உருவாக்கி விடுகின்றன. எனவே ஒரு சமுதாயத்தின் கருத்தாதிக்கத்தை, உலகப்பார்வையை நிர்ணயிக்கும் பலமிக்க சாதனங்களாக பத்திரிகைகள் செயற்படுகின்றன.

முதலாளித்துவ சமுதாயத்தில், ஆளும் வர்க்கத்தின் நலன்களையும், அபிலாசைகளையும், பத்திரிகை உலகம் பிரதிபலிக்கத்தவறுவதில்லை. ஏனென்றால், ஆளும்வர்க்கத்தின் கருத்து உற்பத்திச் சாதனங்களாகவே பத்திரிகைகள் செயற்படுவதுண்டு. அத்துடன் இந்தக் கருத்து உற்பத்திச் சாதனங்களின் உரிமையாளர்களாக இருப்பவர்கள் முதலாளிவர்க்கத்தைச் சார்ந்தவர்களே. முதலாளித்துவ ஆளும் வர்க்கம், பத்திரிகைச் சாதனங்கள் மூலம் மக்களின் மனதை அடிமைப்படுத்தி வைக்கின்றது. இதை நீடிக்கச் செய்வதற்காக பழமைவாதத்தையும், மூடநம்பிக்கையையும் வளர்க்கின்றது. புரட்சிகரப் பார்வையை மழுங்கடிக்கின்றது. மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வை ஏற்படாமல் தடுக்கின்றது. உண்மையை மறைக்கின்றது. யதார்த்த உலகின் முரண்பாடுகளை வெளிக்காட்டி, உண்மையை உரைக்க மறுக்கின்றது.

இந்த வகையில், முதலாளித்துவ உலகம் சமுதாயப்புரட்சிக்கும், அரசியல் விடுதலைக்கும், விரோதமாக செயற்படுகின்றது.

தமிழீழத்தில் ஒருதேசிய விடுதலைப் போராட்டம் நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. சமூகமாற்றத்தை நோக்கிய ஒரு புரட்சி நடந்தேறிக்கொண்டிருக்கிறது. இந்தப்புரட்சிகரமான சூழலில் வெளியாகும் பத்திரிகைகளின் பங்கும், சமூகப்பொறுப்பும், தேசியக் கடமைப்பாடும் எப்படி அமைய வேண்டும்?

தமிழீழ விடுதலைப் போராட்டமானது, ஆக்கிரமிப்பாளர்களான சிங்களப் படைகளை, எமது மண்ணிலிருந்து விரட்டியடிக்கும் அதே வேளையில், ஒரு சமூகமாற்றத்தையும் வேண்டிநிற்கின்றது.

அந்தச் சமூக மாற்றத்திற்கு ஏற்ற விதத்தில், மக்களைத் தயார்படுத்துவதற்காக, அவர்களுக்குத் தகுந்த கருத்துக்களைக் கொடுத்து உண்மை நிலைகளை விளக்கி, அறியாமைகளைப் போக்கி, விழிப்புணர்வு மிக்க மக்கள் கூட்டமாக மாற்றவேண்டியதில், தமிழீழப் பத்திரிகைகளுக்கு முக்கிய பங்குண்டு.

மக்களின் சிந்தனைகளில், மனோநிலைகளில், மாற்றங்களைக் கொண்டுவருவதற்காக என்னதான் மிகப் பெரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், அதை மக்களின் மனங்களில் ஊடுருவச்செய்ய பத்திரிகைகளால் தான்முடியும்.

உண்மையில், இன்றைய சூழலில் தாமாகவே முன்வந்து விடுதலைக்கு உரமூட்டக் கூடிய, சமூக விழிப்புணர்ச்சிக்கு உதவக்கூடிய, கருத்துப் போராட்டங்களில் முனைப்புடன் இறங்கவேண்டிய தமிழீழப் பத்திரிகைகள், அவ்விதம் செய்யாது பழைய சிந்தனைகளையே ஊட்டுவதிலும், அடிமை மனோபாவத்தை வளர்ப்பதிலும் ஈடுபட முனைகின்றன.

இந்தநிலையை மாற்றியமைக்கும் நோக்குடன், ஒரு கருத்துப் போராட்டத்தை நிகழ்த்துவதற்காக புதிய சிந்தனைகளையும், சரியான பார்வைகளையும், ஆரோக்கியமான கருத்துக்களையும் பல்வேறு வடிவங்களில் தமிழீழப்பத்திரிகைகளுக் கூடாகக் கொடுக்க விடுதலை விரும்பிகள் பலர் முயல்கின்றார்கள்.

அவ்விதமாக சிலர் கொடுத்த படைப்புகளிலுள்ள புதிய கருத்துக்களை, புதிய பார்வைகளை, நீக்கிவிட்டு அவற்றைப் பிரசுரிப்பதிலேயே எமது பத்திரிகைகள் கண்ணும்கருத்துமாக இருக்கின்றன.

இது மக்களிடம் சரியான கருத்துக்கள் சென்றடைவதை, வேண்டுமென்றே தடுக்கும் செயல்களாகவே கருத வேண்டியுள்ளது.

விடுதலைப் போராட்டம் முதிர்ச்சி பெற்றிருக்கும் தற்போதைய கால கட்டத்திலும்கூட தமிழீழப்பத்திரிகைகள் அவ்விதம் நடப்பது அபாயகரமானதொன்றாகும்.

விடுதலைப் போராட்டத்தை விரும்பாத, சமூக மாற்றத்தை ஜீரணிக்க முடியாத, பத்திரிகை நிறுவன உரிமையாளர்களினது மனநிலைகளையும், அவற்றில் தொழில் புரிகின்ற பத்திரிகைஆசிரியர்களினது விருப்பு வெறுப்புக்களையும், எப்படி நாசூக்காக மக்கள் மீது செலுத்துகின்றார்கள் என்பதற்கு அதி சிறந்த உதாரணம் ஒன்றைப் பார்ப்போம்.

28-12-90 —அன்றைய முரசொலி பத்திரிகையின் உட்பக்கத்தில் ஒரு கட்டுரை வெளிவந்திருந்தது. கோட்டையில் வீரமரணமடைந்த வீரவேங்கை'' பெனா''வினது (இனிற்றன் நிர்மலன் - பண்டிவிரிச்சான்) நினைவாக ஒரு போராளி எழுதியனுப்பிய கட்டுரை அது.

அக்கட்டுரை மூலம், அப்போராளி எத்தகைய கருத்துக்களை மக்களுக்கு சொல்ல விரும்பினாரோ அந்தக்கருத்துக்களை அப்படியே நீக்கிவிட்டு ''இறக்கை இல்லாத கோழி ஒன்றை உலாவவிட்டதைப்போல'' அக்கட்டுரை பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அந்த கட்டுரையை அப்படியே கீழே தருகிறோம். அதில் பிரசுரிக்கப்படாத வரிகளை, அதன் இடத்திலேயே அடிக்கோடிட்டுக் காட்டி இனங்காட்டுகின்றோம்.

அவன் சிறுவன் தான். பாடசாலைக்கல்வியை இடைநடுவில் மறுத்து போராட்டத்துக்குள் நுழைந்தவன்.

''தான் இயக்கத்திற்குப் போனால் செத்துவிடுவேன்'' என்று நினைத்துக்கொண்டு தான் இயக்கத்திற்கேவந்தவன். ஆனால், அவன் தொடர்ந்தும் கல்வி கற்றலையும், தேடலையும் விடவில்லை. படித்தான்... தெரிந்தவரிடத்தில் கேட்டான். காலப்போக்கில் அவன் ஒரு சாதாரண மனிதனின் அறிவை விட அதிகமாகப்பெற்றிருந்தான்.

ஜெயவர்த்தனாவின் பட்டப்பெயரையும், பண்டாரநாயக்காவின் அரசியற் திருமணத்தைப் பற்றியும் அவன் அறிந்திருந்தான்.

லெனினைப்பற்றியும், ரொக்சியைப்பற்றியும், ஜார் மன்னனைப்பற்றியும் அறிந்திருந்தான்.

காந்தியின் உண்மைத்தன்மையைப் பற்றி ஆராயும் அறிவைப் பெற்றிருந்தான்.

தந்தை செல்வாவையும், அமிர்தலிங்கத்தையும் வேறுபடுத்திப்பார்க்க அவனுக்குத் தெரிந்திருந்தது.

போர் முறையுடன் இந்த நாட்டின் வரலாற்றைப்பற்றியும், அரசியலைப்பற்றியும் பெனா தெரிந்திருந்தான். ஒரு மனிதனின் ஒழுக்கமான கண்ணியமான வாழ்வு முறையைக் கற்றிருந்தான்.

பொதுவாக, துட்டகைமுனுவையும், பராக்கிரமபாகுவையும் தெரிந்த மாணவனுக்கு, சங்கிலியனையும், பண்டாரவன்னியனையும் தெரிந்திருப்பதில்லை.

ஜான்சிராணியையும், பிரான்சு தேசபக்தையான ஜேன் ஒவ் ஆர்க்கையும், தெரிந்தவர்களுக்கு, நல்ல நாச்சனையும், அரியாத்தாவையும் தெரிவதில்லை.

எமது தேசத்தைப்பற்றி அதன் பெருமைகளைப்பற்றி தெரியாதவர்களுக்கு எமது தேசத்தில் பற்றுவருவதற்கூரிய சாத்தியப்பாடு இல்லைத்தான்.

ஆனால் ஒரு போராளி கற்கும் பொழுது தன்தேசத்திற்குத் தேவையானதைக் கற்கின்றான். தன் போராட்ட வாழ்வு முறைக்குத் தேவையானதைக் கற்கிறான் - கல்வியை தன் தேசத்திற்கு தேவையானதாக்குகிறான்.

சின்ன வயதிலேயே போரின் பெருஞ்சுமை பெனா மீது செலுத்தப்பட்டது, ஏதோ உண்மைதான். ஆனால் அதனை அவன் விரும்பி ஏற்றுக் கொண்டான்.

தன்னுடன் வாழ்ந்த - சண்டைபிடித்த போராளிகளின் சாவைப்புரிந்து கொண்டு போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்குரிய மனப்பக்குவம், அவனுக்கு ஏற்பட்டிருந்தது.

சாவுகளைக் கண்டு அவன் மரத்துப்போகவில்லை. நிதர்சனத்தைப் புரிந்து கொண்டதால், சாவு இந்த மண்ணுக்கு தவிர்க்க முடியாதது என்பதை விளங்கிக் கொண்டதால் தான், மரணங்கள் அவன் வாழ்வுத் திசையை மாற்றவில்லை.

போராளி என்பவன் மக்களை மிகவும் நேசிக்கும், மக்களின் பிரதிநிதி. அதே நேரம் தன் தோழர்களுக்கிடையே மிகவும் நெருக்கமாகி விடுபவன். அவர்கள் ஒரே இலட்சியத்தையும், ஒரே வழிமுறைகளையும் கொண்டவர்கள். வெற்றி அவர்களை உற்சாகப்படுத்தும். இழப்புகள் அவர்களை வாட்டும். வெற்றியைக் கண்டு இறுமாப்படையவும், தோல்விகளையும் துயரையும் கண்டு துவண்டு போகவும், அவர்கள் சாதாரண மனிதர்களாக இருக்கவில்லை. ஒரு போராளியாக அதாவது உண்மையை விளங்கிக்கொண்ட மனிதர்களாக இருந்தார்கள்.

பெனாவை மாதிரித்தான், அவனுடைய வயதை ஒத்த ஒவ்வொரு போராளிகளும், இந்த மண்ணின் தேவைகளைப் புரிந்து கொண்டவர்கள். அதனால்தான் சின்ன வயதில் தமக்காக வாழாமல் இலட்சக்கணக்கான அவர்களது இனத்தவர்களுக்காக வாழ்ந்தார்கள்.

எவ்வளவுதான் அறிவிருந்தாலும், வயதிற்குரிய சில இயல்புகளையும் அவர்கள் மீறவில்லை. சின்னப் பிரச்சனைகளுக்காகச் சண்டையிடவும்- அழவும் தவறவில்லை.

மோட்டார் சைக்கிளையும், வானையும், இன்னும் எல்லாவற்றையும் இயக்கிப் பார்க்கவும் அவர்கள் தவறவில்லை.

ஆனால், ஒரு வயதிற்கு மீறிய அறிவும் - அனுபவமும் அவர்கள் பெற்றது உண்மை. ஓர் உயர்வகுப்பு மாணவனைவிட அதிகமாக அவர்கள் கற்றுக்கொண்டார்கள். ஆனால் ஒழுக்கத்திலும், பண்பிலும் மனித நேயத்திலும், அவர்கள் இந்த உலகத்தில் ஒருவருடனும் ஒப்பிடமுடியாதவர்களாக உயர்ந்து நிற்கின்றார்கள்.

மேற்குறித்த கட்டுரை வெறும் புகழ்ச்சிக்காக எழுதப்பட்ட கல்வெட்டு விருத்தம் அல்ல.

வீரமரணமடைந்த ''பெனா'' என்றொரு போராளியை மையமாக வைத்து எமது சமூகத்திற்கு கொடுக்கவேண்டிய உண்

(5 ஆம் பக்கம் பார்க்க)



பெனா

பிறப்பு: 25-4-1973 வீரமரணம்: 3-8-1990




### கப்டன் டோறா...

ஏதோ பேசிக் கொள்கிறார்கள் ''கெரில்லா இயக்கமாம்'' சிங்களப் பொலிசுக்கும், ஆமிக்கும், ஒழித்திருந்து அடி கொடுத்து விட்டு ஓடிவிடுகின்றார்களாம். 'பெடியள் எல்லாம் இரகசியமாக சேருகின்றார்களாம்' ஆண்பிள்ளைகளைப் பெற்றவர்களின் அடிவயிற்றில் மெதுவான ஒரு இடியின் அதிர்வு...... தமது பிள்ளைகளை எச்சரிக்கின்றார்கள். ''வேலைகளில் கவனமாக இருக்க வேண்டும் வீணான கதைகள் கதைத்து வீதிகளில் நேரத்தைக் கழிக்கக் கூடாது. ஆயுதத்தில் மயங்கிவிடக்கூடாது. ஆமியோடு நாம் மோதமுடியாது''

இருப்பினும் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. 'பொலிஸ் ஜீப் வண்டி தாக்கப்பட்டு துப்பாக்கி கைப்பற்றப்பட்டது... இராணுவ வண்டி தாக்கப்பட்டது, இராணுவத்தினர் உயிரிழந்தனர்......

அப்படியானால், இந்தக் கெரில்லா இயக்கத்தில் பெண்பிள்ளைகள் பங்குபற்றக் கூடாதா? இலங்கை இராணுவத்தில் பெண்கள் சேர்க்கப்படவில்லை. அப்படிச் சீருடை அணிந்து மிகக் கம்பீரமாக ஆயுதம் தரித்து நிற்க சிங்கள அரசும் பெண்களைச் சேர்க்கமாட்டார்களா?

அப்படியானால் இந்த கெரில்லா இயக்கங்கள் இரகசியமாக விட்ட பிரசுரங்கள், புத்தகங்களில் வெளிநாட்டு கெரில்லா இயக்கங்களில் பெண்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றதே... இவர்கள் நம்மைச் சேர்க்கவில்லையாம்.

இது 1982, 1983 களில் கெரில்லா இயக்கத்தின் செயற்பாடுகளை கேள்வியுறுகின்ற பெண் பிள்ளைகளின் ஏக்கம் இந்த ஏக்கம் டோறாவையும் விடவில்லை, எப்படியும் பாடசாலைக்கு பிரசுரம் தர வருபவரிடம் கேட்டு விட வேண்டும்......

பதில் கிடைத்து விட்டது. ஆம்... ஆனால் உடனே எடுக்க மாட்டோம்... முதலில் எமக்கு உதவிகள் செய்ய வேண்டும். அதன் பின்புதான் எடுப்போம். இன்னும் ஒரு பொம்பிளைப் பிள்ளையையும் எடுக்கவில்லை. எடுக்கும் போது உங்களையும் எடுப்போம்.

பலநாள் இரகசியச் சந்திப்பில் என்ன உதவிகள் செய்வது? எப்படிச் செய்வது என்று தெளிவானது. பாடசாலைப் படிப்பும், ரியூட்டறிப் படிப்பும் அரைகுறையானது. புரட்சி அறிவு புகுந்து கொண்டது. அம்மாவுக்கும் அப்பாவுக்கும் பொய் சொல்ல வேண்டி வந்தது. புலிகளின் இரகசியமான பிரச்சார வகுப்பு, தையல் வகுப்பு என்று கூறப்பட்டது. ஆயுதம் பற்றிய அறிவைப் பெறும் வகுப்பு, சமையல் கலை பயிலும் வகுப்பென்று கூறப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில் தான், டோறாவும்விடுதலைப் பணியில் இரகசியமாக ஈடுபட்டிருந்தாள். அவள் இரகசியமாக வேலை செய்வது வீட்டுக்குத் தெரிய வந்ததும் அப்பா கட்டுப்பாடுகளை விதித்தார். அம்மா கண்ணீர் வடித்தார். சகோதரிகள் பாசத்தைப் பொழிந்தனர் கல்யாணம் பேசி கால் கட்டுப் போட எண்ணினர். டோறா உதறித் தள்ளினாள். தேசத்துக்காகப் போராடும் உரிமையைப் பெறுவதற்காக வீட்டிற்குள் போராடினாள். வெற்றியும் கண்டாள். கடைசியில் வெளிப்படையாகவே தனது பணிகளைச் செய்யத் தொடங்கினாள். அவளின் குடும்பத்தாரும் அவளின் பணியில் பங்கு கொண்டனர். இவள் போன்று அந்நேரத்தில் பங்களித்த பெண்கள் யாவரும், வீரமரணத்தைத் தழுவிவிட்ட லெப்டினன்ட். நித்திலாவோடு சேர்ந்து பெண்கள் மத்தியில் விடுதலைக் கருத்தை விதைத்தார்கள்.

புலிகளின் பிரச்சார ஏடுகள் பத்திரிகைகள், பிரச்சாரங்கள் இரகசியமாக பெண்கள் மத்தியில் கைமாற்றிக் கொண்டனர். கிராமத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று பெண்களோடு இரகசியமான முறையில் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தனர். இவ்வாறு விடுதலையில் பங்காற்றிய பெண்கள் ஒன்று இரண்டு, ஒரு அணியாக நின்று, பெண்கள் மத்தியில் பல வேலைத் திட்டங்களை முன்வைத்தனர். 'சுதந்திரப் பறவைகள்' என்ற சஞ்சிகையை முதலில் 1984 மார்கழியில் வெளியிட்டார்கள். இதனை முதன் முதலாக வெளிக்கொண்டு வருவதிலும் தொடர்ந்து அது வெளியிடப்படுவதிலும் டோறாவின் பங்கும் முக்கியமானது. சங்கீதத்திலும் நடனத்திலும் மிகத் திறமை காட்டிவந்த டோறா ''சுதந்திரப்''பறவை அணியினரின் அரசியல் வேலைத்திட்டமான பாலர் பாடசாலை ஒன்றை அமைத்து, பாலர்களுக்குக் கல்விபோதிக்கும் பணியில் ஓரிரு ஆண்டுகள் பணியாற்றினாள். சேவை மனப்பான்மையோடும், ஆர்வத்தோடும், துடிப்போடும் இதில் பங்காற்றினாள். எங்கே குழந்தைகளைக் கண்டாலும், அள்ளி அணைத்து முத்தம் கொடுக்கும் இவளின் இயல்பும், அந்தக் குழந்தைகளை ரீச்சர் ரீச்சர் என்று பாசத்தைக் கொட்ட வைத்தது.

இது மட்டுமல்ல, சுதந்திரப் பறவை அணி மேற்கொண்ட அனைத்து அரசியல் வேலைத் திட்டங்களிலும் டோறா தனது பங்கை ஆற்றினாள். பின்தங்கிய கிராமந்தோறும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்து, அங்கே கடமை செய்ய பெண்களை அணி திரட்டினாள். இந்நிலையங்களை நிர்வகிப்பதற்காகவும் மருத்துவம் சம்பந்தமான அறிவைப் பெண்களுக்குப் புகட்டுவதிலும், மருத்துவத் துறையிலும், டோறா தன் அறிவை வளர்த்துக் கொண்டு பணியில் ஈடுபட்டாள்.

இக் காலங்களில் சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து ஏவப்படும் எறிகணைகளினாலும், விமானக் குண்டு வீச்சுக்களினாலும் தாக்கப்படும் பொழுது அந்தப் பகுதிகளுக்கு விரைந்து, முதலுதவிச் சிகிச்சை செய்வதிலும் ஆர்வம் காட்டினாள். வசதியற்ற தொழில் வாய்ப்பற்ற பெண்களை சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக பனை வேலை, தையல் வேலை, மனையியல் வேலை, உணவு பதனிடுதல், பாதுகாத்தல் போன்றவற்றின் பயிற்சி வகுப்புக்களை, பெண்களிற்கு நடாத்தி சிறு கைத்தொழில் நிலையங்களையும் உருவாக்கப் பாடுபட்டாள். இதன் மூலம் சமூக ஒடுக்குமுறைக்கெதிராக பெண்களை ஸ்திரப்படுத்துவதோடு, அரசுக்கெதிரான வெகுஜனப் போராட்டங்களிலும் பெண்களைப் பெருமளவு அணிதிரட்டக் கூடியதாக இருந்தது.

சுயமாகவே பல வேலைகளைத் திட்டமிட்டு ஆர்வத்தோடு செயற்படுத்தி வந்த டோறா, நெல்லியடி, கரவெட்டி, கரணவாய் போன்ற பிரதேசங்களில் மகளிர் அணிப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு 1985, 1986 களில் அப்பொறுப்பில் இருந்து கடமையாற்றி வந்தாள்,

தமிழீழத்தில் முதன்முதலாக பெண்களுக்கான இராணுவப் பயிற்சிப் பாசறை ஒன்று அமைக்கப்பட்டபோது டோறா அங்கே தனது ஆயுதப் பயிற்சியை முடித்துக் கொண்டு, 1987 ஆடியில் வெளியே வந்தபோது எமது தேசத்தை இந்தியப்படை ஆக்கிரமித்தது. இந்தியப் படைக்கெதிரான சாத்வீகப் போரில் பெண்களை அணிதிரட்டி, தனது பழைய பொறுப்பிலேயே கடமையாற்றி வந்த டோறா, இந்திய இராணுவம் எமது மண்ணிலே யுத்தத்தைத் தொடங்கிய பொழுது முதன் முதலாக களத்தில் குதித்தாள். இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்து யாழ் மாவட்டத்தில் நடந்த யுத்தத்திலும், வன்னிப் பிராந்தியத்தில் நடந்த யுத்தத்திலும் தீவிரமாகப் பங்கு கொண்டாள்.

எமது பகுதிகளை இராணுவம், சுற்றிவளைத்துத் தேடுதல் நடாத்திக் கொண்டிருந்த வேளையில் காவலரண் ஒன்றில் இவள் தனித்து நிற்கின்ற பொழுது இந்திய இராணுவம் எமது முகாமை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது. இவ் வேளையில் சமயோசித புத்தியோடும் மிகத் துணிச்சலோடும் தனித்து நின்று போராடினாள். இராணுவம் காயப்பட்டதோடு தனது ஆயுதங்களின் பகுதிகளையும் போட்டு விட்டுப் பின்வாங்கியது. துணிச்சலோடும் தீரத்தோடும் சாதனை செய்கின்ற ஏனைய போராளிகள் பாராட்டுப் பெறுவது போன்று, இவளும் எமது தோழர்களினதும் தலைவரினதும் பாராட்டைப் பெற்றாள்.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை, இந்த மண்ணிலிருந்து அடியோடு விரட்ட வேண்டுமென்று துடியாய்த் துடிக்கும் போராளிகளில் இவளும் ஒருத்தி.

எமது ஆன்ம உறுதிக்கு முன்னே ஆட்டங்கண்ட இந்திய இராணுவம் எரிமலைகளோடு மேலும் மேலும் மோதி அழிந்து விடாமல் பின்வாங்கிச் சென்றது.

இலட்சிய வீரர்களின் தியாகத்தினாலும், ஆன்ம உறுதியாலும் இந்திய இராணுவத்தை வெளியேற்றி பெரியதொரு வளர்ச்சிக் கட்டத்தைக் கண்ட எமது விடுதலை இயக்கம் சிறிலங்கா அரசுடன் யுத்த நிறுத்தத்தையும் பேச்சுவார்த்தைகளையும்தொடர்ந்தது.

இவ் வேளையில் மீண்டும் அரசியலில் பணியாற்றப் பணிக்கப்பட்ட டோறா ''சுதந்திரப் பறவைகள்'' பத்திரிகைகள் ஆசிரியராகப் பங்காற்றினாள். பறவை 15 வெளிக்கொணர்வதில் இவளின் பங்கு மிக முக்கியமானதாகஇருந்தது.இவ்வேளையில் ''தமிழீழ மீட்பு நிதி'' சேகரிப்பில் மக்களை அணிதிரட்டி கருத்தரங்குகள்வைத்து மீட்பு நிதி பெருமளவு சேர்வதற்கு பெரும் பங்காற்றினாள். இவ் வேளைகளில், இவள் மக்களை அணுகிய விதமும், வழங்கிய கருத்துக்களும் மிகவும் பாராட்டப்பட்டது.

ஆண், பெண் சக போராளிகளின் அபிமானப் பாடகியாவாள் டோறா. நல்லூர் அரங்கிலே அன்னை பூபதிக்கு மக்கள் அஞ்சலிசெலுத்த திரண்டிருந்த நாளிலே, மகளிர் அணி அஞ்சலிப் பாடல் நிகழ்ச்சியை செய்தது. இதில் டோறாவும் தனது பங்களிப்பைச் செலுத்தியிருந்தாள். மக்களோடு மிக நெருங்கிப் பழகி, அவர்களின் பாசத்தையும், நேசத்தையும் இலகுவாகப் பெற்றுக் கொள்வாள். இது போன்றே, தனது வெளிவீட்டுத்துறைக்கு வேண்டிய எழுத்தாளர்கள், ஓவியர்களை அணுகி அவர்களின் அன்பையும் நேசத்தையும் மட்டுமல்ல ஆக்க பூர்வமான பங்களிப்பையும் பெற்றுக் கொண்டாள்.

எமது சமாதான முயற்சிகளை முறித்துக் கொண்டு மீண்டும் சிறிலங்கா அரசு 10.06.90 தனது யுத்த தாண்டவத்தைத் தொடங்கியது. தமிழீழம் முழுவதும் இரத்தக்களமானது. எமது மக்கள் மீது வெறிகொண்டு தாக்கிய சிங்கள இராணுவத்துக்கும், முஸ்லீம் ஊர்காவல் படைக்கும், இனத்துரோகிகளுக்கும் சமாதிகட்ட எமது தோழர்கள் பலர் உயிரைப் புதைத்தனர். மண்ணுக்கு உரமாக்கினர்.

எமது சுதந்திர வரலாறு மையினால் எழுதப்படுவது அல்ல. இரத்தத்தினால் எழுதப்படுவது, உணர்வென்ற சக்தியால் தனது உடலைக் கிழித்து, உயிரென்ற பேனா முனையால் உதிரத்தைத் தொட்டு, போராட்ட வரலாற்றின் ஒரு அத்தியாயத்தை எழுதத்துடித்தாள் டோறா......

பலாலி இராணுவ முகாமைக் கட்டுப்படுத்தும் காவலரண் பகுதிக்குச் சென்றாள். குழுத் தலைவியாகப் பொறுப்பேற்றுக் கொண்டாள். இராணுவத்தினுடைய துப்பாக்கி ரவைகளுக்கும், எறிகணைத் தாக்குதல்களுக்கும், இலக்காகி விடாமல், நின்று எதிரியைத் தாக்குவதற்காக காவலரண்களைப் பலப்படுத்தும் வேளையில் தனது குழுவோடு இரவுபகல் தூக்கமின்றிப் பாடுபட்டாள். இராணுவத்தை முடக்கி வைப்பதில் பெண்கள் அணியில் நின்று தீவிரமாகப் போர் புரிந்தாள். களைப்பிருந்தாலும் இப்போது அவள் மிகவும் சந்தோஷமாகக் காணப்பட்டாள்.

ஒரு நாள் இரவு அவள் இருந்த இடத்திற்குச் சென்றேன். ஓர் திடீர்த் தாக்குதலுக்காக மெதுவான ஆர்ப்பாட்டம். முகாமில் தென்படுகின்றது. கடைசியாக அவளை நான் பார்த்த பொழுது...... தன் சிநேகிதியின் கரத்தைப் பற்றிய வாறு ''நான் போகிறேன்''... ''என்று முகமலர்ந்து கூறுகின்றாள். அவளின் கரத்தை இறுகப் பற்றிக் கொண்ட அவளின் சிநேகிதி... எவ்வளவு தூரம் சாதிக்க முடியுமோ அவ்வளவு தூரம் சாதி, அப்போது நீ சாவை அணைத்துக் கொண்டால் கூட நான் கவலைப்படமாட்டேன். இப்போது நீ போகின்றாய் இன்னொரு நாள் உன் பின்னால் நான் வருவேன்'' என்கிறாள். பிரிவு வரப் போகிறது-ஆனால் வெற்றியொன்று கிடைக்கப் போகின்றது, என் பதில் உறுதி உடையவளாக,

( 11-ஆம் பக்கம் பார்க்க)



கப்டன் டோறா

(க. பத்மாவதி, கரவெட்டி மேற்கு)

வீர ஜனனம்: 15-12-1963 வீரமரணம்: 22-11-1990




பொம்பர் ஒன்று
கரிச்சான் போல
தாழப் பறந்து எழுந்து
அடுத்த இடத்திற்கு
சடுதியாய்ப் போகிறது
இடியாக இரண்டு சத்தங்கள்.

கலிபர் பொருத்திய
தும்பி ஒன்று
தகர விட்டில் பெய்த
கோடை மழைபோல்
சடசடத்துப் பறக்கிறது.

பயணிகள் வானூர்தி
தன் வயிற்றிலிருக்கும் பீப்பாவை
குடிமனை மீது குப்புறத் தள்ளும்
மற்றொன்று
மலத்தொட்டி போடும்.

அடுத்தவூர் இராணுவம் அனுப்பிய
ஆட்லெறிகள்
குடிசை முகட்டில்
குந்தி இருக்கும்
சேவலின் தலைக்குமேல்
கூவிக்கொண்டு போகும்.

எதிரி அனுப்பிய
தகரி (டாங்கி) யின் குண்டு
ஆலையில் விழுந்து சிதைக்கும்.

உறங்காத எம்புலிகள்
ஏவிடும் எறிகணை
படை முகாம் உள்ளும் வெளியிலும்
விழுந்து எச்சரிக்கும்.

நண்பனின் சைத்துவக்கு
எதிரியை நோக்கி
கோப்பையில் விழும்
சொட்டு நீர் விழ்க்கைபோல்
விசையினைக் கொடுக்கும்.

இரத்தப்பசி தீர்க்கும்
அடக்குமுறையாளனின்
வயிற்றுப் பசிக்கு,
இரைபோட வந்த
இரண்டு தும்பிகள்
புலிகளின் குறி பார்ப்பில்
சிதறியோடித் தப்பும்.

மேலும்... மேலும்...
செத்தமாடு தின்ன வரும் கழுகு போல
பகைப் பருந்துகள்
எம் தேசவானை நிறைக்கும்

இதற்கிடையில் வீறிட்டு அழும்
எம் சந்ததியை
தாய் மார்போடணைத்து
சின்னவளைத் தடவிப் பார்ப்பாள்.

மாமரத் தடியில்
மண்கிண்டிப் படுத்திருந் நாய்
எழுந்து வந்து
சிறிய வட்டச் சுற்றின் பின்
பாய்க்குப் பக்கமாய் முடங்கும்.

பழகிப் போன
பதுங்கு குழி இருட்டில்
தன் தாயின் முகவாட்டமறிந்து
ஒரு சிறுவன்
ஆறுதல் சொல்வான்.

பசியை மறந்த கன்று
தாயின் மடியின் கீழ்
பதுங்க இடம் பிடிக்கும்

குரக்கனுக்கு நீர் பாய்ச்சச்சென்ற அய்யா
ஆடுகால் மறைவில்
குந்தி இருந்து யோசிப்பார்.

பழுத்த வாழை நாரில்
பழம் தின்ன வந்த வெளவால
வேகமாய் பறக்கும்

புலி அக்கா தந்த பொதியை
ஒரு தங்கை
பாதி உறக்கத்தில் எழுந்து
பத்திரப் படுத்துவாள்
அக் காட்டுப்புறா
அவளிடம் ஏதோ குறுகுறுக்கும்

காவலரண் பொடியன்களுக்கு
தேத்தண்ணி வைக்க
ஒரு தாத்த
அசதியில் படுத்திருக்கும்
தன் பேத்தியை உசுப்புவார்.

வேகமாய் எழுந்த பாட்டி
அவளுக்கு விறகெடுத்துக் கொடுப்பாள்
கதைச்சுச் சிரித்தபடி
இரு தங்கைகள்
புலியண்ணன்களுக்குப்
புட்டவிக்க மாவிடிப்பர்.

விடியலுக்காக விழித்திருப்பது
நாங்கள் மட்டுமல்ல
தேசம் முழுவதுமே.

போராடுவது
கருவியேந்திய புலிகள் மட்டுமல்ல
அனைத்துக் கைகளுமே.

ஆதிக்க பரம்பரையின்
உலக வரலாற்றில்
குட்டுப் படாமல்
புத்தி வந்ததில்லையே!
பகைவனே!
உனக்கும் தான்.

# தமிழீழப் பத்திரிகை...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மைக் கருத்துக்களை சுலபமாக விளங்கிக்கொள்ளக் கூடிய விதத்தில் சொல்லப் பட்டிருக்கின்றது.

இந்த 17 வயதுப் போராளியாம் கோட்டை காவலரணில் கடமையாற்றியபோது அவனது மனதில் தெறித்த கருத்துக்களை தனது கைப்பட குறிப்பேடொன்றில் எழுதி வைத்திருந்தான். அந்தக் குறிப்பேட்டை ஈழநாதம் பத்திரிகைமூலம் எற்கனவே மக்களுக்குத் தெரியப் படுத்தியிருந்தோம்.

பிரசுரிக்கப்படாது நீக்கப் பட்ட வாசகங்களையும் அதன் அர்த்தங்களையும் ஒருங்கே சேர்த்துப் பார்ப்போம்.

✲ காந்தியின் உண்மைத்தன்மைபற்றி.........

✲ ஒரு மனிதனின் ஒழுக்கமான, கண்ணியமான, வாழ்வுமுறையைக் கற்றிருந்தான்.

✲ எமது தேசத்தைப் பற்றி, அதன் பெருமைகளைப்பற்றித் தெரியாதவர்களுக்கு, எமது தேசத்தில் பற்றுவருவதற்குரிய சாத்தியப்பாடு இல்லைத்தான்.

✲ ஒரு போராளி கற்கும்பொழுது தன் தேசத்திற்குத் தேவையானதைக் கற்கிறான். தன் போராட்ட வாழ்வு முறைக்குத் தேவையானதைக் கற்கின்றான். கல்வியை தன் தேசத்திற்கு தேவையானதாக் குகின்றான்.

✲ ......ஒரு போராளியாக, அதாவது உண்மையை விளங்கிக் கொண்ட மனிதர்களாக இருந்தார்கள்.

இந்திய தேசப்பிதா காந்தியை எழுந்தமானமாக விமர்சிக்க மேற்குறித்த சொற்றொடரை அப் போராளி பாவிக்கவில்லை. வரலாற்றை அப்படியே மனப்பாடம் செய்வதைவிட; ஆய்வுடன் வரலாற்றை அறியவேண்டும் என்பதற்காகவே '' காந்தியின் உண்மைத்தன்மை பற்றி '' என்ற சொற்றொடரை அவர் பாவித்திருந்தார்.

ஆனால் அர்த்தம் நிறைந்த அந்த வார்த்தைப் பிரயோகதை நீக்கிவிட்டு '' சத்திய வாழ்வுபற்றி '' என்று மாற்றி அடிப்படைக் கருத்தையே கொலைசெய்துவிட்டார்.

அமையப்போகும் சமுதாயத்திற்கு போராளிகளே முன்னுதாரணமாக இருக்க வேண்டும் — இருக்கமுடியும். அதற்கான ஒழுக்கம், கண்ணியம், சமுதாய வாழ்வு என்பன போராளிகளிடம் நிரம்பப் பெற்றிருக்க வேண்டும். அவர்கள்தான் இந்தப் புதிய சமுதாயத்தின் உண்மை மனிதர்கள். அந்த உயர்ந்த மனிதர்களுக்கே உரிய ஒழுக்கம், கண்ணியம், சமுதாயவாழ்வு முறைகளை தனது போராட்டவாழ்வில் ஒரு போராளி கற்கின்றான்.

இந்த உன்னத சமுதாய தேவை, குறிப்பிட்ட பத்திரிகை நிறுவனத்தின் பார்வையில், அவசியம் அற்றதாகக் கருதப்பட்டு நீக்கப்பட்டிருக்கின்றது

ஒரு மாணவன் எதைக் கற்க வேண்டும்? அந்தக் கல்வியின் பயன்பாடு எதற்குச் சேவை செய்வதாக இருக்கவேண்டும் என்ற கேள்விகளுக்கான புரட்சிகரமான விடைகள் மக்கள் அறியக் கூடாததொன்றாகக் கருதப் பட்டு நீக்கப்பட்டிருக்கின்றது.

இதற்கு முன்னரும் '' ஒரு போராளியின் பார்வையில் கல்வி '' என்ற தலைப்பிட்டு முரசொலி ஒரு கட்டுரையை பிரசுரித்திருந்தது. அதன் அடிப்பகுதியில் கோட்டையில் வீரமரணமடைந்த பிரதீபனின் குறிப்பேட்டில் இருந்த '' போராட்டமே எதிர் காலத்தைத் நிர்மாணிக்கின்றது '' என்ற வாசகத்துடன் கட்டுரை முடிக்கப்பட்டிருந்தது.

ஆனால் 20.11.90 அன்று பிரசுரமாகிய அந்தக் கட்டுரையில் மேற்குறித்த வாசகம் நீக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அடிமை மனோபாவத்துடன் கூடிய சுயநலத்துடன் வாழமுனையும் ஒரு தனிமனிதனுக்கு இருக்கத் தேவையற்றதை - இருக்கமுடியாததை கட்டுரையிலிருந்து விலக்கியிருக்கின்றார்கள்.

இத்தகைய பிற்போக்குத்தனமான பத்திரிகை நிறுவனங்களின் பார்வையில் சமூக மேம்பாடோ அல்லது தியாக மனப்பான்மையோ தேவையற்றதுதான், ஒட்டு மொத்தத்தில் மாற்றங்களை இவர்களால் ஜீரணிக்கமுடியவில்லை. பழைய சிந்தனைகளிலிருந்தும், சமுதாய நோக்கற்ற பார்வைகளிலிருந்தும் மீள விரும்புகின்றார்களில்லை.

போராட்ட காலகட்டத்திலும் சினிமா நடிகைகளைப் பற்றி எழுதுவதிலேயேதான் காலத்தை ஓட்டுகின்றார்கள்.

மேலும், எமது மக்களை இளிக்கொள்ளச் செய்யவும், போராட்டத்தின் வெற்றியில் அவர்களிற்கிருக்கும் நம்பிக்கையைச் சிதைக்கச் செய்யும் நோக்குடன் சிறீலங்கா அரசு செய்யவேண்டிய பிரச்சாரத்தை இங்கே, தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்து அரச விசுவாசத்தைக் காட்டிக்கொள்ள முற்படுவதும் பத்திரிகா தர்மத்துக்குச் செய்யும் துரோகங்களாகும்.

இத்தகைய பத்திரிகைகளின் உரிமையாளர்களினதோ, அல்லது ஆசிரியர்களினதோ தனிமனித உணர்வுகளைப்பற்றி நாம் அலட்டிக்கொள்ளப் போவதில்லை. ஆனால் பிரச்சனை எங்கே எழுகின்றது என்றால்... இத்தகைய மனோநிலை கொண்டவர்கள் மக்களுக்கு கருத்துக்களை ஊட்டவேண்டிய பத்திரிகைகளின் உரிமையாளர்களாகவும், ஆசிரியர்களாகவும் இருப்பதுதான் சமூகத் தீங்கானது.

இத்தகையவர்களின் குறுகிய நோக்கம் கொண்ட சொந்த விருப்பு - வெறுப்புக்கள் பத்திரிகைகளின் கருத்தாகப் பரிணமிக்கும்போது மக்கள் விழிப்புணர்ச்சி பெறுவதிலிருந்து தடுக்கப்பட்டு விடுகின்றார்கள்.

இப்பொழுது தமிழீழ விடுதலைப் போராட்டம் வீறுடன் வெற்றிநடை போடுகின்றது. இந்தப் போராட்டத்தின் நேரடி விளைவாக எமது மக்கள் சொல்லொணாத் துயர்களை அடைகின்றார்கள்.

அந்தத் துயர்களையும், அழிவுகளையும், நிர்ப்பந்தங்களையும் எதிர்கொண்டபடியேதான், விடுதலைபெற்ற புரட்சிகரமான சமுதாயம் ஒன்றை அமைக்கப்பாடுபடுகின்றோம்.

சாதிவெறிகள் அற்ற, மூடநம்பிக்கைகள் களையப் பெற்ற, பிற்போக்குச் சிந்தனைகளிலிருந்து விடுபட்ட, மதவெறி இல்லாத, சமூக உணர்வுகள் மேலோங்கிய தமிழீழ சமுதாயத்தைப் படைக்க முயலுகின்றோம்.

பத்திரிகைகளுக்கிருக்கும் சமூகப்பொறுப்புக்களை, தார்மீகக்கடமைகளை பத்திரிகை நிறுவனங்கள் புரிந்துகொண்டு இந்த உயரிய, பொதுநோக்கிற்கு தமிழீழத்தின் பத்திரிகைகள் தங்களையும் அர்ப்பணிக்க வேண்டும்.

மேற்குறித்த சமுதாய இலட்சியங்களை ஏற்றுக் கொள்ளாத நடைமுறைப் படுத்துவதற்கு தடையாகவுள்ள பத்திரிகை நிறுவனங்களோ, அல்லது பத்திரிகை ஆசிரியர்களோ, தமிழீழ மக்களை தவறான வழிக்கு இட்டுச் செல்லக்கூடிய கருத்துக்களையே தொடர்ந்தும்மக்கள் மத்தியில் பரப்புவார்கள்.

இந்த எச்சரிக்கையை தமிழீழ மக்களுக்கே சமர்ப்பிக்கின்றோம்.

# போரும், போர் நிறுத்தங்களும்,

புரட்சிகர ஆயுதப்போர் வடிவம் எடுத்துள்ள ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் போரும், போர் ஓய்வும், பேச்சு வார்த்தைகளும் நிகழ்வது வழமை. உலக விடுதலைப் போராட்ட வரலாறுகள் இதற்கு சான்று பகிர்கின்றன. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் எமது இயக்கமும் தனது நீண்ட, தொடர்ச்சியான ஆயுதப் போராட்ட வரலாற்றில் பல தடவைகள் போர் நிறுத்தம் செய்திருக்கிறது. பேச்சுவார்த்தைகளையும் நடாத்தியிருக்கிறது. எத்தகைய சூழ்நிலையில், எவ்வித நிர்ப்பந்தங்களால் இந்தப் போர்நிறுத்தங்களும் பேச்சுக்களும் நடைபெற்றன ?

இந்தப் போர்நிறுத்தங்களையும் பேச்சுக்களையும் முறித்துக்கொண்டது யார் ?

எமது எதிரியான சிங்கள அரசுஇராணுவ அடக்குமுறைப் பாதையை நாடுவதன் நோக்கமென்ன ?

எமது தேசியப் பிரச்சனைக்கு சமாதான வழிமூலம் நிரந்தரத் தீர்வு ஏற்படுவது சாத்தியமா ?

இப்படியான கேள்விகளுக்கு இங்கு தெளிவான விளக்கங்களை அளிக்க முயற்சிக்கிறோம்.

## முதலாவது போர் நிறுத்தம்

1985-ம் ஆண்டு ஆனி மாதம் 18-ந் திகதி சிங்கள ஆயுதப் படைகளுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் மத்தியில் முதற்றடவையாகப் போர்நிறுத்தம் ஏற்பட்டது. இந்திய அரசு இந்தப் போர் நிறுத்தத்தை ஒழுங்கு செய்தது. போர் நிறுத்த விதிகளும் கட்டுப்பாடுகளும் சிறீலங்கா அரசுக்குச் சார்பாக இருந்தமையால் நாம் கடும் ஆட்சேபம் தெரிவித்தோம். ஆயினும் இந்திய அரசு தந்த உறுதிமொழிகள் காரணமாகவும், இந்தியாவின் சமரச முயற்சிக்கு குந்தகமாக இருக்க விரும்பாததாலும் நாம் போர் நிறுத்தத்தைப் பேண முடிவு செய்தோம். போர் நிறுத்தப் பிரகடனத்தை அடுத்து ஆடி மாத முதற் பகுதியில் பூட்டான் தலைநகரான திம்புவில் இந்திய அரசின் மத்தியத்துவத்தின் கீழ் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல்.எவ், டெலோ, புளொட், ஈரோஸ் போன்ற அமைப்புக்களும் பேச்சுக்களில் கலந்து கொண்டன. திம்புவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமானதிலிருந்து சிங்கள இராணுவம் போர் மீறல் நடவடிக்கைகளில் இறங்கியது. திருக்கோணமலை மாவட்டத்தில் பல தமிழ்க் கிராமங்கள் தாக்கப்பட்டன. பல அப்பாவித்தமிழர்கள் கொல்லப்பட்டனர். தமிழ்ப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர் இது பற்றி நாம் ஆட்சேபித்த பொழுது, 'இவையெல்லாம் சிறிய சம்பவங்கள்' என்று கூறி இந்திய அரசு சிங்கள இராணுவத்திற்காகப் பரிந்து பேசியது. தான் ஒழுங்கு செய்த பேச்சுவார்த்தைகள் முறிந்து போகக் கூடாது என்பதில் இந்திய அதிகாரிகள் அதித அக்கறை காட்டினர். ஆனால் அதே சமயம் பேச்சுவார்த்தைகளை முறித்து விடவேண்டும் என்பதில் சிங்கள அரசும் சிங்கள இராணுவமும் திட்டமிட்டுச் செயற்பட்டன. இதனால் பேச்சுகள் நல்லெண்ணத்துடன் நடைபெறவில்லை.

திம்பு பேச்சுக்களின் போது தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சனைக்கு அடிப்படையான நான்கு கோட்பாடுகளை விடுதலைப்புலிகள் இயக்கம் முன் வைத்தது. சகல தமிழ்க் குழுக்களும் இதனை அங்கீகரித்தன. தமிழீழ மக்கள் ஒரு தேசிய இன அமைப்பைக் கொண்டவர்கள்; அவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஒரு தாயகப் பூமி உண்டு; ஒரு தேசிய இனம் என்ற ரீதியில் தமிழீழ மக்கள் சுயநிர்ணய (தன்னாட்சி) உரிமைக்கு உரித்தானவர்கள்; மலையக தமிழ் மக்களுக்கு குடியுரிமையும் சகல அரசியல் சுதந்திரங்களும் வழங்கப்படவேண்டும்.

இந்தக் கோட்பாடுகளை அங்கீகரித்து அவற்றின் அடிப்படையில் தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சனைக்கு ஒரு தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படவேண்டும் என்ற விடுதலைப் புலிகளினதும் மற்றைய தமிழ் அமைப்புக்களினதும் ஏகோபித்த கோரிக்கையை சிறீலங்கா அரச பிரதிநிதிகள் நிராகரித்தனர்.

தமிழீழ மக்கள் ஒரு தேசிய இனமல்ல, அவர்களுக்கு தனித்துவமானஒரு தாயகமும் இல்லை, தன்னாட்சி உரிமை என்பது தமிழீழ மக்களுக்குக் கிடையாது, என்ற ரீதியில் சிங்கள அரசு விதண்டாவாதம் பேசியது. இனிப்பேசுவதற்கு ஒன்றுமில்லை என்ற அளவிற்கு சிங்கள அரசு தனது நிலைப்பாட்டை இறுக்கியது.

அதே சமயம் எமது கோட்பாடுகளில் நியாயமில்லை என்றும் அவற்றைக் கைவிடுமாறும் இந்திய அரசும் ஒரு புறம் அழுத்தம் போட்டது.

### சிங்கள அரசுகளின் சுயரூபம்

இப்படியாகத் திம்பு பேச்சுவார்த்தைகள் சிக்கலடைந்த வேளையில், அதாவது 1985ம் ஆண்டுஆவணி மாதம் நடுப்பகுதியில், சிங்கள இராணுவம் வவுனியா மாவட்டத்திலுள்ள சில கிராமங்களைச் சுற்றி வளைத்து, பெண்கள் குழந்தைகள் உட்பட, இருநூறுக்கும் அதிகமான அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்தது.

இந்த மிருகத்தனமான இனக் கொலைச் சம்பவம் திம்புப் பேச்சுக்களை அர்த்தமற்றதாக்கியது. தமிழர் பிரச்சனைக்கு எந்தவகையான தீர்வை சிங்கள இனவாத அரசு விரும்பியது என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்கியது.

எனவே நாம் திம்புபேச்சுவார்த்தைகளை பகிஸ்கரிக்கத் தீர்மானித்தோம். ஏனைய அமைப்புகளும் வேறு வழியில்லை என்பதால் விடுதலைப்புலிகளின் தீர்மானத்தை ஆதரித்தன. பேச்சுக்களை தொடர்ந்து நடத்த இந்திய அரசு எடுத்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை. இந்தியா அரங்கேற்றிய திம்பு அரசியல் நாடகம் இடைநடுவே முடிவுற்றபோதும் சிங்கள இனவாதத்தின் சுயரூபத்தை உலகிற்கு எடுத்துக் காட்டியது.

## இரண்டாவது போர் நிறுத்தம்

1987ம் ஆண்டு ஆடி மாதம் 29ம் திகதி இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதிலிருந்து மீண்டும் இரண்டாவது தடவையாக சிங்கள ஆயுதப்படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் மத்தியில் போர் நிறுத்தம் ஏற்பட்டது. இதனையடுத்து இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் '' அமைதிகாக்கும் படை '' என்ற போர்வையில் தமிழீழத்தில் காலை வைத்தது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை எமது இயக்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும் முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி எமது தலைவர் பிரபாகரனை டில்லியில் சந்தித்து சில வாக்குறுதிகளை அளித்தார். இதன் அடிப்படையில் எமது மக்களின் நலன்கள் பாதிக்கப்படாத வரை இந்தியாவின் சமரச முயற்சிக்கு இடையூறாக நிற்பதில்லை என ஆரம்பத்தில் நாம் முடிவெடுத்திருந்தோம்.

எமது நல்லெண்ணத்தின் எடுத்துக்காட்டாக கணிசமான தொகையில் ஆயுதங்களையும் ஒப்படைத்தோம். ஆயுத ஒப்படைப்பை அடுத்து எமது போராளிகள் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்குவதாக சிறீலங்கா அரசு அறிவித்தது. ஆனால் சிங்கள அரசின் போர் நிறுத்தமும் பொதுமன்னிப்பும் நீண்ட காலம் நீடிக்கவில்லை.

1987ம் ஆண்டு ஐப்பசி மாதம் ஆரம்பத்தில் சிறீலங்கா கடற்படையினர் எமது தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உட்பட 17 போராளிகளை பருத்தித்துறைக்கடலில் வைத்து கைது செய்தனர். இது பாரதூரமான ஒரு போர் நிறுத்த மீறல் நடவடிக்கை மட்டுமல்லாது பொது மன்னிப்பையும் கேலிக்கூத்தாக்குகிறது. கைது செய்யப்பட்ட எமது போராளிகள் பின்னர் இந்திய இராணுவத்திடம் கையளிக்கப்பட்டபோதும், அவர்களை கொழும்புக்கு கொண்டு சென்று விசாரிக்க வேண்டுமென சிங்கள அரசு விடாப்பிடியாக நின்றது.

இறுதியில் இந்தியாவினதும் சிறீலங்காவினதும் கூட்டுச் சதியால் எமது தளபதிகள் உட்பட 12 வீரர்கள் சாவைத் தழுவிக் கொள்ள நேர்ந்தது.

## தமிழீழ இந்தியப் போர்

1987 ஐப்பசி மாதம் 10ம்திகதி இந்திய-புலிகள் யுத்தம் மூண்டதை அடுத்து சிங்கள ஆயுதப்படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியிலான போர் நிறுத்தமும் முறிவடைந்தது ஒரு புறம் இந்திய இராணுவத்தையும், மறுபுறம் சிறீலங்கா இராணுவத்தையும், இன்னொரு புறம் இந்திய கூலிப்படைகளாகச் செயற்பட்ட தமிழ் ஆயுதக் குழுக்களையும் எதிர்த்து புலிப்படை வீரர்கள் போர்க்களம் புகுந்தனர்.

## மூன்றாவது போர் நிறுத்தம்

புதிய ஜனாதிபதியாக பிரேமதாசா பதவி ஏற்றதை அடுத்து விடுதலைப் புலிகள் இயக்கத்தை பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்தார். 1989ம் ஆண்டு சித்திரை மாதம் நிபந்தனைகள் எதுவுமற்ற முறையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின. இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின்போது, அதாவது 1989ம் ஆண்டு ஆனி மாதம் நடுப்பகுதியில் சிறீலங்கா அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும் போர் நிறுத்த உடன்பாட்டிற்கு வந்தன. அதிகாரபூர்வமான கூட்டறிக்கையாக இந்தப் போர்நிறுத்தம் பிரகடனம் செய்யப்பட்டது.

சிங்கள ஆயுதப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் போர்நிறுத்தம் பேணப்பட்டபொழுதும் தமிழீழத்தில் இந்திய இராணுவத்திற்கு எதிரான யுத்தம் தொடர்ந்தது.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை தமிழீழ மண்ணிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும் என்ற நோக்கின் அடிப்படையில்தான் எமது இயக்கம் சிறீலங்காவுடன் பேச்சுக்களை நடாத்தியது. சிங்கள அரசுக்கும் அதே நிர்ப்பந்தம் இருந்ததால் பேச்சுக்கள் சுமூகமான முறையில் தொடர்ந்தது. புலிகள் இயக்கத்தை அழித்து, தமிழர் சுதந்திர இயக்கத்தை நசுக்கி, சிங்கள அரசின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காக தமிழீழ மண்ணில் இரத்தம் சிந்திக்கொண்டிருந்த இந்திய அரசுக்கு விடுதலைப் புலிகளின் இந்த ராஜதந்திர நகர்வு பெரும் சங்கடத்தைக் கொடுத்தது. முகத்தில் கரி பூசியபடி, வேண்டாவெறுப்புடன் தனது



நெஞ்சில் விடுதலை நெருப்பைச் சுமப்பவன்
நேரில் எதிரியைக் கண்டு கொதிப்பவன்
அஞ்சுதல் எனும் உணர்வை அறிகிலான்
ஆட்டைத் தூக்கிக் கொஞ்சி மகிழ்கிறான்
வெஞ்சமர்க் களம் மீதிலே வேங்கையாய்
வீறுகொண்டுமே பகைவனைக் கொன்றிடும்
பிஞ்சின் நெஞ்சிலே ''மனிதம்'' சிரித்திடும்
புலியின் குட்டியின் கைகளில் குட்டியா?

# பேச்சுவார்த்தைகளும்

ஆக்கிரமிப்பு இராணுவத்தை திருப்பி அழைக்கவேண்டிய தவிர்க்கமுடியாத நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டது.

1990ம் ஆண்டு பங்குனி மாதத்துடன் இந்திய இராணுவம் தமிழீழ மண்ணிலிருந்து வெளியேறியது. கொழும்பு பேச்சுவார்த்தைகள் அந்நிய ஆக்கிரமிப்பிற்கு ஒரு முடிவுகட்டியதே தவிர தமிழீழ மக்களின் அடிப்படையான பிரச்சனைகள் எதனையும் தொட்டு நிற்கவில்லை. தமிழரின் சுயநிர்ணய உரிமைக்கு ஆப்பு வைத்த அரசியலமைப்பின் ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்கிவிடவேண்டுமென விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கையையும் அரசு தட்டிக்கழித்துவந்தது.

## சிங்கள அரசின் போர் தயாரிப்பு

பேச்சுவார்த்தைகள் 15 மாதங்களாக இழுபட்டபோதும், தமிழீழத்தில் நிலவிய அரசியல் வெறுமையைப் போக்க பிரேமதாசா அரசு எத்தவிதமான உருப்படியான நடவடிக்கைகளையும் எடுக்க மறுத்தது. அதேசமயம் பேச்சுக்களை ஒருபுறத்தில் நடாத்திக்கொண்டு, மறுபுறம் தனது ஆயுதப் படைகளை நவீனமயப்படுத்தி பலப்படுத்துவதில் அரசு பேரார்வம் காட்டியது, புதிய படைப் பிரிவுகளை உருவாக்கியதோடு வெளிநாடுகளிலிருந்து நவீன ஆயுதங்களையும் பெற்றுக்கொண்டது. பேச்சுவார்த்தை என்ற போர்வையில் யுத்தத்திற்கான ஆயத்தங்களை அரசு செய்தது.

இது ஒரு புறமிருக்க, தென் தமிழீழத்தில் சிங்களக் குடியேற்றமும் துரித கதியில் நடைபெற்றது. எமது ஆட்சேபனைகளையும் அசட்டை செய்து புதிய குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதுமாத்திரமன்றி, எமக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறி, பெரும்தொகையில் சிங்கள காவல்துறையினர் இப்பகுதிக்கு அனுப்பப்பட்டனர்.

1990ம் ஆண்டு வைகாசி மாதத்தில் சிங்கள இராணுவமும், சிங்கள காவற்துறையினரும் போர் நிறுத்தத்தை மீறும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் இறங்கினர்.

முன்பெல்லாம் முகாம்களுக்குள் முடங்கிக் கிடந்த இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கையில் இறங்கப்போவதாக வற்புறுத்தினர், சில சந்தர்ப்பங்களில் புலிகளின் காவல் நிலைகளை உடைத்தெறிந்து இராணுவம் வெளியேற முயற்சித்தது. இதனால் வவுனியாவிலும், மட்டக்களப்பிலும் மோதல் சம்பவங்கள் வெடித்தன. இந்த மோதல்கள் இறுதியில் முழு அளவிலான போராக பரிமாணம் எடுத்தது.

இதற்கிடையில் போர் நிறுத்தத்தைக் கொண்டு வருவதற்காகநாம் எடுத்த முயற்சிகளும் தோல்வியைக் கண்டன. ஏனென்றால் சிங்கள இராணுவம் போர் நிறுத்தத்தை விரும்பவில்லை. தமிழர் பிரச்சனைக்கு உருப்படியான தீர்வுத்திட்டம் எதையும் முன்வைக்க விரும்பாத அரசு யுத்தத்தை நாடியது.

சென்ற ஆண்டு ஆனிமாதம் 10ம் திகதி ஆரம்பமாகிய போர் என்றுமில்லாதபடி கொடூரமான முறையில் தமிழ் மக்களுக்கு எதிராக ஏவப்பட்டது.

போர் ஆரம்பமாகிய ஒரு சில மாதங்களில் போர் நிறுத்தம் செய்து சர்வதேச மத்தியத்துவத்தின் கீழ்-- பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென சில உலக நாடுகள் சிறீலங்காவை கோரிவந்தன. இராணுவ தரப்பில் பாரிய உயிர்ச்சேதத்தையும் களத்தில் பல தோல்விகளையும் கண்ட சிங்கள அரசு தானாக போர்நிறுத்தம் செய்யத் தயங்கியது. சர்வதேச மத்தியஸ்துவத்தின்கீழ் தமிழர் பிரச்சனை உலக முக்கியத்துவம் பெறுவதையும் சிங்கள இனவாதிகள் விரும்பவில்லை,

## புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பு

அந்த நிலையிலும் புத்தாண்டிலிருந்து ஒருதலைப்பட்சமாக காலவரையறையற்ற போர்நிறுத்தம் செய்ய நாம் முடிவெடுத்தோம், தமிழர் பிரச்சனையில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட சில உலக நாடுகளின் யோசனையை நாம் நிராகரிக்க விரும்பவில்லை. அத்துடன் போரினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக அவலப்படும் எமது மக்களின் நிலையை உலக அரங்கில் எடுத்துச் சொல்லி அவர்களுக்கு நிம்மதியையும் நிவாரணத்தையும் தேடிக்கொடுக்க விரும்பினோம். இதன் பிரகாரம் மார்கழி 29ம் திகதி மூன்று நாட்கள் அவகாசம்கொடுத்து நாம் ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தத்தை பிரகடனம் செய்தோம், இந்தப் போர் நிறுத்தத்தை நாம் பிரகடனம் செய்ததிலிருந்து நிகழ்ந்த சம்பவங்கள்பற்றி எமது மக்கள் அறிவார்கள். சிங்கள இராணுவம் தொடர்ச்சியாக யுத்த நிறுத்த மீறல்களைச் செய்துவிட்டு எம்மீது பழியை சுமத்தியது என்பதையும், போர் நிறுத்தத்திற்கும் பேச்சுக்களுக்கும் எவ்விதமான அநீதியான, ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளை சிறீலங்கா அரசு விதித்தது என்பதையும் எமது மக்கள் அறிவார்கள். இது சம்பந்தமாக எமது இயக்கம் விரிவான அறிக்கைகளையும் வெளியிட்டிருக்கிறது.

திம்பு பேச்சுவார்த்தையிலிருந்து இன்றுவரை மேற்கொள்ளப்பட்ட போர்நிறுத்தங்களை எல்லாம் சிங்கள அரசு திட்டமிட்டவகையில் முறித்து வந்திருக்கிறது. பேச்சுவார்த்தைகளையும் குழப்பி வந்திருக்கிறது. தமிழர் பிரச்சனைக்கு சமாதான வழியில் ஒரு தீர்வு காண்பதில் சிங்கள இனவாத அரசியல்வாதிகளுக்கு எவ்வித அக்கறையும் இல்லை என்பதை இந்த வரலாற்று நிகழ்வுகள் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. சிங்களப் பேரினவாதம் இராணுவத் தீர்வையே விரும்புகிறது. இராணுவ அடக்குமுறைமூலம் தமிழீழ மக்களை அழித்தொழித்து அடிமைகொள்ள விரும்புகிறது. தமிழீழ மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்க சிங்கள ஆளும் வர்க்கம் மறுக்கிறது. தமிழீழ மக்களுக்கு ஒரு தாயகப்பூமி உண்டென்பதை நிராகரிக்கிறது. தமிழரின் தன்னாட்சி உரிமையை கௌரவிக்க மறுக்கிறது. ஒற்றையாட்சி, ஒரே தேசம், ஒரே பிரதேச ஒருமைப்பாடு, என்ற கோட்பாடுகளை முன்வைத்து இலங்கைத் தீவுமுழுவதும் சிங்கள இறைமைக்கு உட்பட்டதாக வரட்டு வேதாந்தம் பேசுகிறது. இந்தப் பேரினவாத அரசியல் சித்தாந்தத்தை இறுகப் பிடித்திருக்கும் சிங்கள ஆளும் வர்க்கம் தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சனைக்கு நியாயமான ஒரு தீர்வை ஒருபொழுதும் முன்வைக்கப் போவதில்லை.

போர்நிறுத்தங்கள் செய்து, பேச்சுக்களை நடாத்தி சமாதான வழிமூலம் ஒரு தீர்வைக்காண நாம் பல நல்லெண்ண முயற்சிகளை மேற்கொண்டோம். சமாதானத்தின் கதவுகளை நாம் மூடிவிடவில்லை என்பதை நாம் சர்வதேச உலகிற்கு நிரூபித்துக் காட்டிவிட்டோம். சிங்கள அரசு சமாதானப் பாதைக்கு தயாரில்லை என்பதை இன்று சர்வதேச சமூகம் உணரத் தொடங்கிவிட்டது. இந்த சூழ்நிலையில், தமிழீழ மக்கள் தங்களது அரசியல் தலைவிதியைத் தாமே நிச்சயித்துக்கொள்ள வேண்டும் என்பதைத் தவிர அவர்களுக்கு வேறுவழி ஒன்றுமில்லை.

# மாற்றங்கள்...

*- நாடகம் -*

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தால் தயாரிக்கப்பட்ட ''மாற்றங்கள்'' என்ற நாடகம் தற்போது மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

மரபுவழி நாடகங்களைப் போன்று இடைவிடாத சம்பாசினை, யதார்த்தத்துக்குப் புறம்பான நடிப்புகள் — காட்சிகள், என்றில்லாமல் கதையின் ஓட்டமும் — நடிப்பும் யதார்த்தத்துடன் பின்னிப் பிணைந்து அந்தந்தக் கதாபாத்திரங்களுக்கே உரித்தான நடை — உடை — பாவனைகளுடன் நாடகம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

கதையின் பிரதான கரு தற்போதய மாணவர்களின் மனநிலையைத்தான் மையப்படுத்தியுள்ளது.

சிங்கள — பௌத்த பேரினவாதத்தின் குறியீடுகளையும், அதனது தன்மைகளையும்,

தற்போதய போர் நெருக்கடிகளினால் போர்க்குணம் கொண்ட மாணவர்களையும் - அவர்களது பெற்றோர்களையும், சகோதரிகளையும்,

தமிழ் மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் இந்தப் போர்ச் சூழலிலும் பரந்து சிந்திக்காது சுயநலனையே பிரதானப்படுத்தும் சிலரது மனோபாவங்களையும் செயற்பாடுகளையும், அன்னிய மனோபாவம் கொண்டவர்களினதும், பிற்போக்குச் சிந்தனைகளில் ஊறித்திளைத்தவர்களது சந்தர்ப்பவாதப் போக்குகளையும் சில பாத்திரப் படைப்புகளுக்கூடாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

தாங்கமுடியாத — கொடூரம் நிறைந்த சிங்கள பாசிச அடக்குமுறைகளிலிருந்து விடுபட கற்கும் கல்வி தங்களுக்கு உதவவில்லையே என்ற ஆத்திரத்தை, ஆதங்கத்தை பிரதானமாக வெளிப்படுத்துகின்றார்கள்,

தங்களது ஆத்திரம் கல்வி மீதல்ல கல்வி அமைப்பு மீதே என்பதையும் அது மண்ணுக்கும், மக்களுக்கும் உதவும் வகையில் மாற்றப்பட வேண்டும் என்ற கருத்தையும் முன்வைக்கிறார்கள்.

வழமையாக ஒரு நாடகத்தில் காட்சிகள் மாறும்போது நாடகத் தயாரிப்பாளர்கள் விரும்புவது போன்று ரசிகர்களிடம் உணர்வலைகளை ஏற்படுத்த முடிவதில்லை. ஆனால் ''மாற்றங்கள்'' வித்தியாசமாக அமைந்துவிட்டது.

கதாபாத்திரங்களும், காட்சியமைப்புகளும் ஒரே பார்வையில் தெரியக்கூடியவிதத்தில் நாடகம் நகர்த்திச் செல்லப்படுவதால் '' நடிக்கப்படுகின்றது '' என்ற உணர்வைவிட ஒரு உண்மை நிகழ்வைத் தரிசிக்கும் மன உணர்வைத் தான் இந்த நாடகம் கொடுக்கின்றது. அத்துடன் ஒலி பெருக்கிகள் பயன்படுத்தப்படாதது யதார்த்தமான நடிப்புக்கு மேலும் வலு சேர்த்திருக்கின்றது.

## ஒரு கண்ணோட்டம்

இது நாடகத்தை உருவாக்கி — நெறியாண்டவர்களின் நோக்கத்தை வெற்றி பெறச் செய்துள்ளது.

அடுத்ததாக, சில முக்கியமான காட்சிகள் வரும்போது ரசிகர்களுக்கு மத்தியில் வைக்கப்பட்டிருந்த '' முரசு '' மூலம் காட்சிக்கேற்ற வகையில் ஒலி எழுப்பி ரசிகர்களின் நெஞ்சத்துக்குள் கருத்துக்களை அடைத்து விடுகின்றார்கள்.

வழமையாக இத்தகைய இசைமுழக்கங்கள் ரசிகர்களுக்கு ஒரு சிலிர்ப்பைக் கொடுக்கத்தான் — நாடக நெறியாளர்களோ அல்லது திரைப்பட நெறியாளர்களோ பயன்படுத்துவார்கள்.

ஆனால் இங்கே முரசுமுழக்கம் நெஞ்சை நெருடுவதற்காகவும், சொல்லப்படப்போகும் கருத்தின் முக்கியத்துவத்தைப் பறைசாற்றுவதற்காகவுமே பயன்படுத்தப்படுகின்றது.

ஒருவகையில் சொல்லப் போனால் முரச முழக்கம் காட்சிக்கு பின்னணி கொடுக்கவில்லை. அது ஒரு கதாபாத்திரமாகமாறி நடித்திருக்கின்றது.

சிங்கள - பௌத்த பேரினவாதம் தமிழர்களைக் குதறிக் கிழிக்கின்றபோதும்,

பேரினவாத பூதமும், அதனுடன் சேர்ந்திருந்த பிற்போக்கு சக்திகளும் அழிக்கப்படும்போதும், முரசு நன்றாகவே அ(ந)டித்துள்ளது.

நாடகம் தொடங்கும்போதே நாடகபாத்திரங்களில் பலர் தீவட்டிகளைகையிலேந்தியபடி ரசிகர்களுக்குப் பின்னாலிருந்து மேடையை நோக்கிச் சென்று நாடகத்தை ஆரம்பிக்கின்றார்கள்.

இது ரசிகர்களைக் கவர்வதற்காகச் செய்யப்பட்ட ஒரு உபாயம்தான். இதன் மூலம் ஆரம்பத்திலேயே நாடகத்துக்கு ஒரு விறுவிறுப்பை கொண்டுவந்து விடுகின்றார்கள்.அதே விறுவிறுப்புடன் முடியும் வரை நாடகத்தை நகர்த்திச் சென்றது மாணவர் இயக்கத்திடம் இருந்த திறமையைக் காட்டுகின்றது.

17, 18 வயது மாணவ, மணிகளால் எமது சமூகத்திற்கு நல்ல பல கருத்துக்களைக் கலைவடிவங்களுக்கூடாக கொடுக்கமுடியும் என்பதை '' மாற்றம் '' என்ற இந்த நாடகம் உணர்த்தியுள்ளது.

வானத்தில் போர் விமானங்களும் உலங்கு வானூர்திகளும் சுற்றிச் சுழன்று சுற்றாடலில் குண்டுகளை வீசும் சூழ்நிலையிலும் மனப்பாதிப்புக்கு இலக்காகாமல் தொடர்ந்தும் மன உணர்ச்சிகளைக் கொட்டி — நடித்து மக்களை எழுச்சியூட்டச் செய்ய முடியும் என்பதை மாணவர் இயக்கம் நிரூபித்து வருகின்றது.

இந்த மாணவக் கலைஞர்களினால் போர்க்கால கலைவடிவங்கள் பாரிய வழர்ச்சியைக் காணும் என்பது திண்ணம்.

# காதல் விடுதலைகீதம்

சிறுகதை

மழை காலம் - பயிற்சி முகாம்

மலையிலிருந்து இதமான காற்று வீசிக் கொண்டிருந்தது. உடல் நடுங்கத் தொடங்கியது. தனிமையிலிருந்த எங்களின் முன்னால் மழைத்துளிகள் விழுந்து தெறிக்கத் தொடங்கின. நினைவுகளால் மனதும் நடுங்கத் தொடங்கியது. நான் காத்தானின் கண்களைப் பார்த்தேன், அவை கலங்கி இருந்தன.

அந்தக் கண்களில் அவனுடைய கிராமம், தாய், காதலி......

அவனைப் பார்த்து

" நாங்கள் காசை பெரிசா நினைக்கிற சமூகத்தை சேர்ந்தநாங்களடா, எங்களின்ர ஊரில காதல் எல்லாம் கல்யாணத்தை திர்மானிக்கிறதில்லை. பதவியும், பணமும் தான் அதை தீர்மானிக்கிறது. வேலை வாய்ப்பிற்கான படிப்பை விட்டுவிட்டு இயக்கத்துக்கு வந்த எங்களை நம்பி அங்க ஒருத்தியும் இருக்க மாட்டாள், நீ வீட்டை போகேக்கை அவள் கல்யாணங்கட்டி வேறெங்கையும் போயிருப்பாள் " என்றேன், நான்.

எங்கள் முகாமின் அழகான அந்த மலையின் முகடுகளை பார்த்துக் கொண்டே " என்னவள் அப்படி இல்லையடா, நான் ஒரு ஏழை விவசாயி, சொந்த நிலங்கூட இல்லை. ஆனால் அவள் என்னை விரும்பினாள், உங்களின்ர இடம் மாதிரி இல்லை இங்க, பணத்தை பதவியை விட மனிதனைத் தான் நாங்கள் முக்கியமாக கருதிறம், அவள் எனக்காக காத்திருப்பாள் " என்றான், காத்தான். அவன் நம்பிக்கையை சிதைக்க நான் விரும்பவில்லை.

தேவைகள் தான் வாழ்வுத் திசையை தீர்மானிக்கிறது என்று எனக்குத் தெரியும். என்கையை அவன் இறுக்கமாக பிடிக்கும் பொழுதே, அவனின் மனதின் தளர்வை நான் புரிந்து கொண்டேன். அந்த நேரத்தில், அவனுக்கு ஆறுதலாக ஒரு சிரிப்பை சிந்தி விட்டு எழுந்து நடந்தேன்.

மழை குறைந்திருந்தது. ஒவ்வொரு காலைவைத்த பொழுதும் நிலம் இறங்கி இதமாக இருந்தது. பயிற்சி முகாம் வாழ்வு எவ்வளவு வித்தியாசமானது.

நீண்ட தொலைவிலிருந்து வந்த நாங்கள் ஒருவருக்கொருவர் ஆதாரமாக வாழ்கின்றோம். மனதின் சுமைகளை இறக்கி வைக்கவும், மற்றவர்களின் சுமைகளை வாங்கி வைக்கவும் கற்றுக் கொண்டோம். அன்பால் - பாசத்தால் கட்டுண்டு, எங்களுக்குள் பிரிக்க முடியாத ஒரு உறவை ஏற்படுத்திக் கொண்டோம். உண்மைதான்......

அதனால் தான் தாயைவிட நாங்கள் மண்ணை நேசிக்கத் தொடங்கினோம். சகோதரர்களை விட தோழர்களை அதிகமாக நேசிக்கத் தொடங்கினோம்.

பயிற்சி முடிந்தது. புதியதொரு பிரிவுத்துயர் - எங்கள் ஒருவராலுமே தாங்க முடியவில்லை. சோகச் சுமையோடு நாங்கள் பிரிந்து வெவ்வேறு திசைகளில் பறந்து செல்கிறோம்.

* * *

வன்னியில் காட்டுக் கரை விடொன்றில் நாங்கள் முகாம் அமைத்திருந்தோம். காத்தானும் அங்கு வந்தான். அவனுடைய பெயரை நினைக்கும் பொழுதே எனக்குச் சிரிப்பு வரும். பயிற்சி முகாமில் எல்லோரும் நாடகம் நடிக்கிறார்கள் என்று இவனும் ஒரு நாடகம் நடித்தான். எங்களுக்கு அது சேலிக்குரியதாக இருந்தது கூச்சலிட்டு நாடகத்தை இடையில் நிறுத்தினோம். " இது என்ன கர்த்தான் கூத்தா ? " என்று ஒரு தோழன் கேட்டான்.

அன்று தொடக்கம் கேலியாகவே கூப்பிட்டு நிலைத்து விட்ட பெயர் அது. நாங்கள் கட்டித் தழுவிக் கொண்டோம். பரஸ்பரம் எல்லா விடயங்களையும் கேட்டுக் கொண்டோம். அவனை விட நான் ஏதோ அதிகமாக அனுபவம் பெற்றவன் மாதிரிக் காட்டிக் கொண்டேன். காட்டிற்குள் காலம் ஓடியது. காத்தான் இரண்டு நாட்கள் வீட்டிற்கு போயிட்டு வந்தான். அவனை ஒரு ஓரத்திற்கு இழுத்துச் சென்று இருந்து கொண்டேன்.

" என்ன மாதிரி..... வீட்டில... " ?

அவனுடைய முகம் கறுத்து சோகமாகியது. தலையை குனிந்து கொண்டான்.

" ஏன் " நான் கேட்கத் தயங்கினேன்.

" வீட்டை போனனான்ரா அம்மாவும் பிள்ளைகளும் சரியா கஸ்ரப்படுகினம். சாப்பாட்டுக்கு கூட வழியில்லை, அம்மாவுக்குப் பக்கத்து வயல்காரன் மண்வெட்டியால அடிச்சுப் போட்டானாம். மனுசி சுகமில்லாமல் கிடக்குது " என்றான், காத்தான்.

எனக்கு ரத்தம் கொதித்தது போராடப் புறப்பட்ட ஒருவனின் தாயை, அவனொருவன் அனாதை என்றல்லவா நினைத்திருக்கிறான்.

" பிறகு "

" நான் என்னடா செய்யிறது ?, நான் இயக்கமெல்லே " அவனுடைய கண்கள் கலங்கியது. " எல்லாத்தையும் அண்ணையிடமே கூறுவம் அவரேதாவது செய்வார்தானே " என்றான், அவன்.

அண்ணையிடம் சொன்னால் இயக்கம் காத்தானின் குடும்பத்தை பார்த்துக் கொள்ளும் என்பது எனக்குத் தெரியும். ஆகவே அவனுடைய மனதை மேலும் கிளறினேன்.

" அவளிட்டப் போகேல்லையாடா "?

" போனனான்ரா, அவள் ஒன்று மட்டுந் தான் என்னட்டக் கேட்டாள், என்னைத்தான் மறந்து போனீங்கள், பரவாயில்லை, வீட்டில பட்டினி கிடக்கிற உங்கட அம்மாவை பிள்ளைகளையாவது நினைத்தீங்களா " என்று கேட்டாளடா.

நான் மௌனமாக இருந்தேன். அவன் தொடர்ந்தான்.

" நெசவு வேலைக்குப் போய், எங்கட வீட்டுக்கு இவ்வளவு நாளும் அவள் தான்ரா காசு கொடுத்திருக்கிறாள் ". அவனது குரல் தளம்பியது.

நான் சந்தேகப் பட்டேன், பாசத்தில் சிக்கி அவன் பலவீனப்பட்டு விட்டானோ என்று நினைத்தேன்.

" அப்ப என்ன செய்யப் போகிறாய் " என சற்று அலட்சியமாகவே கேட்டேன். அவன் குரலை உயர்த்தியபடியே சொன்னான்.



" நீ நினைக்கிற மாதிரி இல்லையடா, நான் போராட்டத்திற்கு எவ்வளவு உறுதியோட வந்தனோ, அதை விட அதிகமான உறுதியோட இருக்கிறன். எங்கட நாட்டின்ர விடுதலைக்காக, இந்த மண்ணில இருக்கிற ஒவ்வொரு பொருளும் போராட வேணும், அந்த நிலையில காதலை பெரிசா நினைத்து, போராட்டத்தில இருந்து ஒதுங்கிற கேவலமான மனுசனாக நான் இல்லை. என்ர போராட்ட வாழ்க்கையில காதல் ஒரு புள்ளிதான் - அதுமட்டுந்தான் வாழ்க்கையில்லை. நான் சாகும் போது ஒன்று மட்டும் செய்யலாம், என்ர இலட்சியத்தோடு, அவளையும், ஒரு கணம் நினைக்கலாம் அதொன்றுதான் அவளுக்காக நான் செய்யக் கூடியது! ".

அவனில் நான் வைத்திருந்த மதிப்பு, மேலே மேலே உயர்ந்தது. கொஞ்ச நாட்களின் பின் அந்த முகாமிலிருந்து பிரிந்து நான் வேறு இடத்திற்கு சென்றுவிட்டேன். சில நாட்களின் பின் காத்தான் மோட்டார் சைக்கிளால் விழுந்து கடுமையாக காயப்பட்டு விட்டான் என்று கேள்விப்பட்டேன். அவனைப் பார்ப்பதற்காகச் சென்றேன்

காத்தானின் கிராமம் என்னை வரவேற்றது. வன்னிக் கிராமங்களுக்குரிய அழகு அங்கும் பதிந்திருந்தது. ஆனால் வீதி மட்டுந்தான் குண்டும், குழியுமாக இருந்தது

வீட்டில் அவன் படுத்திருந்தான். தன் சின்னக் குழந்தைகளுடன் தாயார் ஒரு ஓரமாக நின்றாள். வறுமையின் கோடு வீட்டில் மட்டும் அல்ல, மனிதர்களிலும் விளையாடி இருந்தது ஒரு பெண் ஏதோ வேலையாக அங்குமிங்கும் ஓடித் திரிந்தாள்.

காத்தானின் முன் வாய்ப் பல்லு இரண்டைக் காணவில்லை. அவனின் வேதனை எனக்குச் சிரிப்பாக இருந்தது. ஓடித்திரிந்த அந்தப் பெண்ணைப் பார்த்து.

" இது தான்ரா ஆள் " என்று காட்டினான், எனக்கு விளங்கியது. அவனுடைய விருப்பத்துக்குரியவளைப் பார்த்து நான் சிறிதாகச் சிரித்தேன். அவள் வெட்கத்துடன் மறைந்து கொண்டாள்.

" இவன் விழுந்ததிலை இருந்து அந்தப் பிள்ளை விடிஞ்சாப், பொழுதுபட்டால் இங்க தான் - உசிரை விடுறாள் " என்றாள், தாய்.

காத்தானும் தன் பங்குக்கு கூறினான்.

" இப்ப என்னை விட அவள் தான்ரா இயக்கத்தில விசுவாசம் கூடப் போல கிடக்குது, இயக்கத்தை விட்டுட்டு தன்னட்ட வர வேண்டாமாம், என்கிறாள் "

ஒரு நல்ல போராளியின் பரிட்சயம், ஒரு கிராமத்தையே விடுதலையை நோக்கித் திருப்பி விடும் பொழுது இவளை மாற்றியது அதிசயமில்லை. காத்தானும் அப்படித்தான், தன் குடும்பத்தை மட்டுமல்ல, உறவுகளையும் விடுதலையை நேசிக்கும்படி செய்கிறான் போலும்.

எங்களை விட்டு மற்றவர்கள் விலகிச் சென்றார்கள். காத்தான் மெதுவாகவே சொல்லத் தொடங்கினான்.

" நான் எல்லாத்தையும் சொன்னனான்ரா, நாளைக்கே நான் சாகலாம் நீ என்ன செய்வாய் " என்று கேட்டேன்.

அவள் மௌனமாக இருந்தாள்.

" நான் செத்தால், அதற்கு பிறகும் நீ வாழ வேண்டும், முடியுமாக இருந்தால், நீ ஆயுதம் தூக்கு. அது உன்னால் முடியாவிடின், இந்த தேசத்தின்ர வாழ்வுக்காக, வளர்ச்சிக்காக ஏதாவது செய்து கொண்டே இரு " என்றேன், அதற்கும் அவள் மௌனமாகவே இருந்தாள். சத்தியமாக இதற்கு இன்று மட்டும் அவள் பதில் சொல்லவே இல்லை. ஆனால் என்ரை விருப்பத்தை அவள் புரிந்து கொண்டிருப்பாளடா " என்றான், காத்தான்.

ஒரு போராளியின் வாழ்வில் குடும்பம், காதல், உறவு, எல்லாம் எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்துகிறது. கஸ்ரமான குடும்பத்தைப் பார்த்துக் கண்ணீர் சிந்தும், தன்னையே நினைத்து வாழும் காதலியைப் பார்த்து அன்பைக்கொட்டும், இவனால் போராட்டத்தின் மீது இவ்வளவு பற்றுடன் எப்படி இருக்க முடிகிறது ? எல்லாவற்றையும் விட " மண்ணை அவன் மிகவும் நேசிக்கிறான் " என்பது எனக்கு விளங்கியது.

நான் விடைபெற்றேன்.

காத்தானின் முகத்தை, அவனது தாயாரின் முகத்தை களங்கமற்ற அவனது காதலியின் முகத்தை, ஒரு கணம் பார்த்துத் தலையை குனிந்தேன்.

கிராமிய வாழ்வு எவ்வளவு பற்றும், பாசமும் நிறைந்தது.

* * *

கொக்கிளாய் இராணுவ முகாமை நோக்கி எமது படையணி முன்னேறியது. காட்டுமரங்களின் கிளைகள் எமது தோழர்களை தடவி வழியனுப்பின. இரவு நேரத்து வானத்தின் தெளிவில் இராணுவத்தினர் இருந்த, பாடசாலைக் கட்டிடம் நிழலாகத் தெரிந்தது.

முன்னேறித் தாக்கும் குழுவில் காத்தானும் ஒருவன். ஒரு புறந்து வேலிக் கம்பியை எம்மவர்கள் வெட்டிய போது, சனியன் பிடித்த நாய் ஒன்று கோரமாகக் குலைத்தது. ஏதோ "சடலைக்" கழிக்க வந்த இராணுவத்தினன் ஒருவன் கத்திக்கொண்டு ஓடினான்; இராணுவத்தினரின் எல்லா காவலரண்களிலிருந்தும் எம்மவர்களை நோக்கி துப்பாக்கி ரவைகள் வரத் தொடங்கின.

தாக்குதல் தொடர்ந்தது.

காவலரண் ஒன்றிலிருந்த இயந்திரத் துப்பாக்கி ஒன்று குவியல், குவியலாக ரவைகளை அள்ளிக் கொட்டியது. அதில் ஒன்று காத்தானிலும்.........

அவன் தாயின், காதலியின் முகத்தில்......... எனி நான் எப்படி விழிப்பேன்.

காத்தான் எனக்குச் சொன்னமாதிரி இறுதி நேரத்தில் தன்னவளைப்பற்றி நினைத்திருப்பான், தன் தாயைக் கூட நினைத்திருப்பான்.

ஆனால் அவனுடைய உயிர் தமிழீழம், தமிழீழம் என்றே பிரிந்திருக்கும்.

( முற்றும். )

# சாதியமும் - புலிகளும்

*காலங்காலமாக, தமிழீழ சமூகத்தின் உணர்வுடன் கலந்திருந்த- வெறுக்கத்தக்க- ஒடுக்குமுறையாகிய சாதியப் பேய் இன்று தனது பிடியை இழந்து வருகின்றது. எமது 18 வருடகால ஆயுதப் போராட்டம், இதைச் சாதித்துள்ளது.*

*தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்படைந்து வர-வர சாதியத்தின் முனையும் மழுங்கிவருகின்றது.*

*அப்படியிருந்த பொழுதிலும் சாதிய ஒடுக்கு முறையின் வெளிப்பாடுகளை சிற்சில இடங்களில் இன்றும் காணக்கூடியதாகவே உள்ளது. அவ்விதம் நாம் சந்தித்த ஒரு முக்கிய சம்பவத்துடன் கட்டுரை ஆரம்பமாகின்றது.*

*சாதியம் தொடர்பான புலிகளின் கருத்தை இக்கட்டுரை தொட்டுச்செல்கின்றது.*

யாழ்ப்பாண நகருக்குச் சமீபமாக ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில் ஒரு நல்ல தண்ணீர்க் கிணறு இருக்கிறது. அந்தக் கிணறு அமைந்திருக்கும் காணி ஒரு தனிமனிதருக்குச் சொந்தமானது. அந்தத் தனிமனிதர் தன்னை ஒரு ''உயர்சாதிக்காரர்'' என எண்ணிக்கொள்பவர். அந்தக் கிராமத்தில் தாழ்த்தப்பட்டோர் எனப்படும் ஒரு மக்கள் பிரிவும் இருக்கிறது. இந்த மக்களுக்கு குடிதண்ணீர் வசதியில்லை. இவர்கள் இந்த நல்ல தண்ணீர்க் கிணற்றிற்கு வருகிறார்கள். தண்ணீர் அள்ளுவதற்கு முயற்சிக்கிறார்கள். இதைக் கண்டதும் கிணற்றுக் காணியின் சொந்தக்காரர் ஓடிவருகிறார். தண்ணீர் எடுப்பதற்குத் தடைவிதிக்கிறார். தாழ்த்தப்பட்டோர் தனது கிணற்றை தீண்டக்கூடாது என்கிறார்.

இதே போன்று வடமராட்சியில் ஒரு சம்பவமும், காரைநகரில் ஒரு சம்பவமும் நடக்கின்றது.

பாதிக்கப்பட்ட அந்த ஏழை மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் வந்து முறையிடுகின்றார்கள். விடுதலைப் புலிகள் அந்த ''உயர்சாதிக்காரர்'' என்பவரை அழைத்து நியாயம் கேட்கின்றார்கள். சமூகநீதி - சமத்துவம் பற்றி விளக்குகிறார்கள். மாறும் உலகத்தைப்பற்றியும்- மனித நாகரீகத்தைப்பற்றியும் பேசுகின்றார்கள். கிணற்றுச்சொந்தக்காரர்கள் இலகுவில் மசிவதாக இல்லை.

தனது காணி, தனது கிணறு, தனது சாதி என அகம்பாவம் பேசுகின்றார். உளுத்துப்போன சமூக மரபுகளை நியாயமாகக் காட்ட முனைகின்றார்கள்.

இவைகள் உண்மையில் நடந்த சம்பவங்கள். இப்படிச் சில சம்பவங்களை யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் இன்றும் சந்திக்கின்றார்கள்.

சாதிவெறி என்ற பிசாசு எமது சமூகத்திலிருந்து இன்னும் ஒழிந்துவிடவில்லை என்பதற்கு இந்தச் சம்பவங்கள் நல்ல உதாரணம்.

ஒரு காலத்தில், யாழ்ப்பாணத்தில், சாதிப்பேய் கோரத் தாண்டவம் ஆடியது. அது தான் சமூக நீதியாகவும் பேணப்பட்டுவந்தது. பின்னர் அதற்கெதிராக, நியாயம் கேட்டு, அடக்கப்பட்ட மக்கள் போர்க்குணம்கொண்டார்கள்.

''அடங்காத்தமிழர்''? ஒரு புறமும், அடக்கப்பட்ட தமிழர்கள் ஒரு புறமுமாக களத்தில் இறங்கினார்கள்.

தாழ்த்தப்பட்டோர் எனப்படும் மக்களுக்கு கோவில்கள் திறந்துவிடப்பட வேண்டும், தேனீர்க்கடைகளில் பாகுபாடு காட்டப்படக்கூடாது என்பது தான் இந்தச் சாதிய எதிர்ப்புப் போராட்டத்தின் குறிக்கோள்.

இதற்காக மோதல்கள் நடந்தன, இரத்தம் சிந்தப்பட்டது, உயிர் இழப்புக்களும் நடைபெற்றன.

இது அன்றைய காலகட்டத்தின் ஒரு முற்போக்கான போராட்டமாகும். அடக்கப்பட்ட அந்தமக்களின் போர்க்குணம் புரட்சிகரமானது.

'ஆனால் தீண்டாமையைக் கடைப்பிடிப்போரின் மனம் திறபடாமல் கோவில்களைத் திறப்பதிலோ, தேனீர்க்கடைகளில் சமவுரிமை கிடைப்பதிலோ சாதியம் ஒளிந்துவிடப் போவதில்லை.

அதே சமயம் ''தீண்டாமை ஒழிப்பு'' என்ற பெயரில் சாதிய ஒழிப்பிற்காக கூட்டணித்தலைவர்கள் நடாத்திய போராட்டம் கேலிக்கூத்தானவை மட்டுமல்ல சாதியத்திற்கு எதிரான அடக்கப்பட்ட மக்களின் போர்க்குணத்தைத் தமக்கே உரிய ''புத்திசாதுரியத்துடன்'' மழுங்கடிக்கும் ஒரு சதிச்செயலுமாகும்.

இவர்கள் நடாத்திய ''சமபந்திப்போசனம்'' என்ற நாடகம் தங்களை ''உயர்சாதிக்காரர்கள்'' என தம்பட்டம் அடித்து விளம்பரப்படுத்தத்தான் பயன்படுத்தினார்கள். கூட்டணியினரின் இந்தப் போராட்டங்கள் அரசியல் இலாபங்களுக்காக நடாத்தப்பட்ட விளம்பரங்களேயல்லாமல் சாதிய முரண்பாட்டை அழித்துவிடும் புரட்சிகர நோக்கத்தைக் கொண்டதல்ல

''சாதியம்'' என்பது காலம் காலமாக எமது சமுதாய அமைப்பில் வேரூன்றிக்கிடக்கும் ஒரு சமூகப் பிரச்சனை. வேதகால ஆரிய நாகரீகத்தின் வர்ண குல அமைப்பிலிருந்து சாதிப் பிரிவுகள் தோற்றம் கொண்டன என்றும், பின்னர் திராவிட சமுதாயத்தில் சாதியம் வேரூன்றிப் பரவியது என்றும் சில ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள். பிராமணர்கள் வேத நூல்களை எழுதினார்கள். மனுநீதி சாஸ்திரங்களைப் படைத்தார்கள். இவற்றில் எல்லாம் பிராமணரை அதி உயர்ந்த சாதியாக கற்பித்து சாதிய அமைப்பை இறைவனின் படைப்பாக நியாயப்படுத்தினார்கள் என்றும் சில ஆய்வுகள் கூறுகின்றன. சாதியத்தின் மூலத்தை ஆராய்ந்தபடி செல்வது இங்கு அவசியமில்லை. எங்கிருந்தோ, எப்படியோ இந்த சமூக அநீதி முறை தமிழீழ சமுதாயத்திலும் வேரூன்றி விருட்சமாகி விட்டது. தமிழீழ மக்களின் சமூக உறவுகளுடனும், சம்பிரதாயங்களுடனும், பொருளாதார வாழ்வுடனும், கருத்துலகப் பார்வையுடனும் பின்னிப்பிணைந்ததாக சாதியம் உள்ளது என்பது யதார்த்த உண்மை. சாதிய முறை, தொழிற் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டதால் பொருளாதார உறவுகளிலிருந்து எழுகிறது. மத நெறிகளும், சித்தாந்தங்களும், சட்டங்களும் சாதிய முறையை நியாயப்படுத்தி வலுவூட்ட முனைகின்றன.

கிராமியப் பொருளாதார வாழ்வை எடுத்துக் கொண்டால் தொழிற் பிரிவுகளின் அடிப்படையில் சாதிய முறை அமையப்பெற்றிருப்பதைக் காணலாம். ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு சாதி என்ற முத்திரை குத்தப்பட்டிருக்கிறது. ஒரு தொழில் உன்னதமானது, மற்றைய தொழில்கள் உன்னதம் குறைந்தது அல்லது இழுக்கானது என்ற மூட நம்பிக்கையின் அடிப்படையில் தொழில் செய்து வாழும் மக்கள் சாதிகளாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த தொழிற் பிரிவுகளிலிருந்தும் அவற்றிற்கு கொடுக்கப்பட்ட, பொய்யான அந்தஸ்துக்களிலிருந்தும் '' உயர் சாதி, '' ''தாழ்ந்த சாதி'' என்ற மூடத்தனமான சமூக உறவுகளும் அவற்றைச் சூழவுள்ள சடங்குகள், சம்பிரதாயங்களும் தோற்றம்கொண்டுள்ளன.

செய்யும் தொழில் எல்லாம் உயர்ந்தது, உழைப்பில் உன்னதமானது, இழுக்கானது எனப் பாகுபாடு காட்டுவது மூடத்தனம். தொழிலின் மகத்துவத்தை சாதியம் இழிவுபடுத்துகிறது. உழைக்கும் வர்க்கத்தை, உண்மையான பாட்டாளி வர்க்கத்தை தாழ்த்தப்பட்டோர் என்றும், தீண்டாதார் என்றும் அவமானப்படுத்துகிறது. மனித அடிமைத்தனத்திற்கும், படுமோசமான ஒடுக்குமுறைக்கும், சுரண்டல் முறைக்கும் சாதியம் காரணியாக இருந்து வருகிறது.

நீண்ட காலமாக எமது சமுதாயத்தில் நிலவி வந்த சாதிய வழக்குகளையும் சம்பிரதாயங்களையும் தொகுத்து அந்நிய காலனித்துவ ஆட்சியாளர் சட்டமாக்கினார்கள். கள். இதுதான் தேச வழமைச் சட்டம் எனப்படும். இச் சட்டங்கள் சாதியப் பிரிவுகள் பற்றியும், சாதிய வழக்குகள் பற்றியும் விளக்குகின்றன. சாதியத்தை நியாயப்படுத்தி வலுப்படுத்த முனைவதோடு, உயர்சாதிக்காரர் எனக் கருதப்படும் ஆளும்வர்க்கத்தின் அபிலாசைகளைப் பேணும் வகையிலும் இந்தச் சட்டத் தொகுப்பு அமைந்திருக்கிறது.

பிரித்து ஆளும் கலையில் கைதேர்ந்த அந்நிய காலனித்துவவாதிகள் மூட நம்பிக்கைகளிலிருந்து பிறந்த சமூக வழக்குகளை சட்டவடிவமாக்கி சாதிய முரண்பாட்டை வலுப்படுத்தினார்கள். சாதியத்தால் பயனடைந்த உயர் சாதியினர் எனப்படுவோர் சாதியத்தை எதிர்க்கவில்லை. இந்தப் பழைய பிற்போக்கான ஆளும் வர்க்கம் அரசியல் அதிகாரத்தை நாடியதே தவிர எமது சமூகத்தில் நிலவும் அநீதிகளையும் ஒடுக்குமுறைகளையும் எதிர்த்துப் போராடத் துணியவில்லை.

பதவிகளைக் கைப்பற்றிக் கொள்வதற்காக காலத்துக்குக்காலம் சாதிய எதிர்ப்புப் போராட்டம் என்ற போர்வையில் சில கேலிக்கூத்துக்களை நடாத்தி, அப்பாவிகளான அடக்கப்பட்ட மக்களின் ஆதரவுகளைப் பெற்று பதவிக் கட்டில் ஏறினார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும், அவர்கள் முன்னெடுத்த தேசிய விடுதலைப் போராட்டமும், தமிழீழ சமுதாயத்தில் ஒரு யுகப் புரட்சியை உண்டு பண்ணியது எனலாம். அரச பயங்கரவாத அட்டூழியங்களும், அதனை எதிர்த்து நின்ற ஆயுதம் தரித்த விடுதலைப்போராட்டமும், எமது சமூக அமைப்பில் என்றுமில்லாத தாக்கங்களை விழுத்தின. பழமையில் தூங்கிக் கொண்டிருந்த எமது சமுதாயம் விடுதலை வேண்டி விழித்தெழுந்தது. வர்க்க சாதிய காழ்ப்புணர்வுகளுக்கு அப்பால் தேசாபிமானப் பற்றுணர்வு தோன்றியது. தமிழீழ மக்கள் ஒரே இன மக்கள் என்ற இனவுணர்வும் பிறந்தது. சாதிய வேர்களை அறுத்தெறிந்து எல்லா சமூகப் பிரிவுகளிலிருந்தும் சகோதரத்துவத்தின் அடிப்படையில் ஒரு தேசிய விடுதலை இராணுவத்தைப் புலிகள் இயக்கம் கட்டி எழுப்பியது. ஒரு தேசிய விடுதலை இயக்கமாக புலிகள் கண்ட வளர்ச்சியும், அவர்களது புரட்சிகர அரசியல் இலட்சியங்களும், சாதியத்திற்கு ஒரு சவாலாக அமைந்தது. தேசிய சுதந்திரத்தை மட்டுமன்றி, சாதியம் ஒழிக்கப்பட்ட ஒரு சமதர்ம சமுதாயத்தை கட்டி எழுப்பும் உறுதியான கொள்கையில் எமது இயக்கம் செயற்பட்டு வருகிறது.

புலிகள் இயக்கத்தின் தோற்றமும், வளர்ச்சியும், அவர்களது இலட்சியப் போராட்டமும், சாதிவேறுபாட்டிற்கு அப்பாற்பட்ட புலிகளின்

(11 ஆம் பக்கம், பார்க்க)

## - போர்க் கைதிகள் -

கடந்த ஏழுமாத காலச் சண்டைகளின் ஆரம்பத்தில், தமிழீழத்திலிருந்த சிறீலங்கா அரசின் காவல் நிலையங்கள்மீது நாம் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது தெரிந்ததே.

இந்தச் சம்பவங்களில் கைது செய்யப்பட்ட, சரணடைந்த 43 சிங்களப் போர்க்கைதிகளை அண்மையில் நாம் பிரகடனப்படுத்தியிருந்த போர்நிறுத்த காலத்தில் (10.1.1991 அன்று) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் சென்று பார்க்கவசதி செய்து கொடுத்திருந்தோம்.

தொடர்ச்சியாக போர்நிறுத்தத்தைக் கடைப்பிடித்து, அதன் அடுத்தபடியாக ஒரு பேச்சுவார்த்தையை நடாத்தி அப்போர்க்கைதிகளை விடுதலை செய்யவும் எண்ணியிருந்தோம். ஆனால், நாம் பிரகடனப்படுத்திய போர்நிறுத்தத்தை சிறீலங்கா அரசு ஏற்றுக்கொள்ளாததால் அந்த முயற்சி தடைப்பட்டுவிட்டது.

இந்தக் காலகட்டத்தில் கடும்நோய்வாய்ப்பட்டிருந்த ஒரு கைதி [குருநாகல் கெப்பிட்டிப்பொலவைச் சேர்ந்த 50 வயதான பொலிஸ் சார்ஜன்ட் கருணாரத்தினா (PC 11812) ] மரணமடைந்து விட்டார். இவரது சடலத்தை மனிதாபிமானத்தின் அடிப்படையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக அவரது உறவினர்களிடம் சேர்ப்பித்துள்ளோம்.

இதேபோன்று, கடுமையான சுகவீனமடைந்திருந்த 54 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் எச். என். நாமரட்னா [அவிசாவெல (PC5434)] என்ற போர்க்கைதியை 14.1.1991 அன்றுவிடுதலை செய்து, அவரையும் உறவினர்களிடம் ஒப்படைக்கும் பொறுப்பை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்திருந்தோம்.

இதே சமயம், தென் தமிழீழத்தில் தமிழ் இன அழிப்பே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அங்கே, கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களையும், அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த தமிழர்களையும் பிடிக்கும் சிங்களப் படைகளும், முஸ்லீம் காடையர்களும், கொடூரமான முறைகளைப் பயன்படுத்தி அவர்களைக் கொன்றுகுவித்துவருகின்றார்கள்.

# தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு கடிதம்

*அன்பான தமிழக சகோதரர்களே!*

இன்று உங்களுக்கு, அருகில்-தங்கள் அடிமை வாழ்வை அகற்றுவதற்காக, உங்கள் இனத்தவர்கள் ஒரு உன்னதமான விடுதலைப் போராட்டத்தை, இரத்தத்திற்கும், துன்பத்திற்கு மிடையே நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

உலகத்தின் எல்லாப் பாகத்திலும் அடக்கப் பட்டு, அடிமையாக இருந்த யூதர்கள் தமக்கொரு தாயகத்திற்காக போராடினார்கள். தமது இனத் தின் சுதந்திர விடியலுக்காக, உலகின் ஒவ்வொரு மூலையிலிருந்த யூதர்களும் உழைத்தார்கள் - போராடினார்கள். முடிவில் இஸ்ரேல் என்றொரு தனியரசு உருவானது.

ஆனால், அருகில் நடக்கும் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை தமிழகம் எவ்வாறு பார்க்கிறது.

தமிழீழமக்களின் விடுதலைப் போராட்டத்தை அரவணைத்து, வளர்த்து, ஊக்கப்படுத்த வேண் டிய தமிழகப் பத்திரிகைகள், தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தை கொச்சைப்படுத்து வதுடன், அவர்களின் போராட்ட அமைப்பான விடுதலைப் புலிகளைப் பற்றி அவதூறான, உண் மைக்குப் புறம்பான செய்திகளை விதைக்கின்றன. இரத்தத்தால், இனத்தால், மொழி, கலாச்சாரம், பண்பாட்டால், இணைந்த தமிழக - தமிழீழத் தமிழர்களை உறவு முறைகளை வைத்து வேறு படுத்திப் பார்க்க விரும்புகின்றன.

இனத்தால் மட்டுமே ஒற்றுமைப்பட்ட, மொழி யால், கலாச்சாரத்தால் வேறுபட்ட, உலகின் பல பகுதிகளில் வாழ்ந்த யூதர்கள், தமது தாயக உரு வாக்கத்திற்காக ஒன்றிணையும் பொழுது. ஒரு நியாயமான விடுதலைப் போராட்டத்திற்காக, இனத் தால், மொழியால், உணர்வால் ஒன்றுபட்ட தமிழர் கள் ஒன்றிணைவதை இவர்கள் விரும்புகிறார்கள் இல்லை.

தமிழக மேடைகளில் அடிக்கடி முழங்கும் ''பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்தால் சங்கா ரம் நிஜமென்று சங்கே முழங்கு'' என்ற பாரதி தாசனின் வார்த்தைகளை எண்ணிப்பாருங்கள். இன்று தமிழீழத் தமிழனுக்கு இன்னல் இல்லை; அழிவே வந்திருக்கிறது. இந்த நிலையில், தமிழகத் தின் சில அரசியற் தலைவர்கள்,

தங்களுக்கிடையே இருக்கும் அரசியற் பிளவுகளுக்காக- தேவைகளுக்காக அற்பத்தன மான முறையில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை விலை பேசுகிறார்கள்.

அருகில் தங்கள் சகோதரர்கள் மிகப்பல மாக இருக்கிறார்கள் என்ற நினைவில், காலத் திற்குக் காலம் இன அழிப்புக்கு உட்பட்ட பொழு தெல்லாம் கடல்கடந்துஈழத் தமிழர்கள்தமிழகத்திற்கு ஓடிவந்தார்கள். தம்மைக் கருணையோடு பார்க்க - அரவணைக்க தம் இனத்தவர்கள் அருகில் உள்ளார் கள் என்ற நம்பிக்கையில், அவர்கள் அங்கு வந் தார்கள்.

ஆனால், காலத்திற்குக்காலம், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை - ஈழத்தமிழர்களின் வேதனைகளை - துன்பங்களை தமிழகத்தின் சில அரசியற் தலைவர்கள் தமது அரசியல் வளர்ச்சிக் காகவும், பதவிகளைக் கைப்பற்றிக் கொள்வதற் காகவும் பயன்படுத்திக் கொண்டார்கள். இன்று தங்கள் நலனுக்காக, தமிழீழ விடுதலைப் போராட் டத்தையே காட்டிக் கொடுக்க நிற்கிறார்கள். அத் துடன் எங்கள் போராட்டத்திற்கு உற்சாகம் தந்து புதுவேகம் தரவேண்டிய தமிழகஅரசினர் படு காயமடைந்து - அங்கவீனர்களாகிய, எமது போராளிகளை கைது செய்து சிறைகளில் அடைத்துள்ளார்கள்.

விடுதலைப் புலிகள் தமிழக மண்ணில் என்ன செய்தார்கள்? தமிழக மக்களின் வாழ்வோட்டத் தில் ஏதாவது மாற்றங்களை ஏற்படுத்தினார்களா? களவு, கொள்ளை, அடாவடித்தனங்களில் ஈடு பட்டு அம் மக்களின் சமூக வாழ்வில் குழப்பங் களை விளைவித்தார்களா? எதுவுமே இல்லையே!

நாம் எப்பொழுதுமே இந்திய மக்களை நேசித் தோம், எம்மீது இந்திய அரசு ஒரு கடுமையான வன்முறை யுத்தத்தை நடாத்திய போது கூட நாம் இந்திய மக்களை நேசித்தோம். தமிழக மண்ணில் அதன் சட்டம், ஒழுங்குகளை மீறாமல் அனு சரித்தே செயற்பட்டோம். தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களின் வேண்டுகோளின் படியே, அண்மையில் காயமடைந்த எமது போரா ளிகளை வைத்திய வசதிக்காக அங்கு அனுப்பி னோம்.

அப்படி இருக்க, எதற்காக தமிழக அரசு எமது படுகாயமடைந்த போராளிகளை சிறையில் தள்ளியது.?

பொதுவாக ஒடுக்கப்படுகின்ற மக்களுக் காக குரல் கொடுக்கின்ற, தென்னாபிரிக்கா, மேற்குசகாரா, பலஸ்தீனம் போன்ற நாடுகளில் நடக்கின்ற விடுதலைப் போராட்டங்களை, அங்கீ கரித்த இந்திய அரசு, இது ஒரு அடக்கு முறைக் கும், அடிமைத்தனத்திற்கும், எதிரான போர் எனத் தெரிந்து கொண்டும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மட்டும் ஏன் அழிக்கப் பார்க்கிறது?

எமது விடுதலைப் போராட்டத்தின் தாக்கம் இந்தியாவில் பல பிரிவினைப் போராட்டங்கள் தோன்றுவதற்கு ஊக்கு சக்தியாக அமைந்து விடும் என இந்திய அரசு எண்ணுகிறதா? அப் படியே என்றாலும், இந்தியாவால் உருவாக்கப் பட்ட வங்காள தேசத்தின் தோற்றம், இந்தியா வில் என்ன மாற்றத்தை கொண்டு வந்தது. வங்காள மொழி பேசும் வங்கமாவது பிரிந்து சென்றதா? அதை விட்டாலும் தமிழீழம் என்ற தொரு சிறிய தேசம், இந்தியாவின் பாதுகாப் பிற்கு ஆபத்தானதாக இருக்க முடியுமா? எல்லா வற்றையும்விட, எமது விடுதலைப் போராட்டம் ஒரு பிரிவினைக்கான யுத்தமல்ல, தாங்கமுடியாத அடக்கு முறைக்கும், அழிவுக்கும் உட்பட்ட ஒரு மக்களின் விடுதலைப் போராட்டம் இது, இதனைத் தூய கண்கொண்டு பார்ப்பதற்கு இந்திய இராஜ தந்திரிகள் தவறிவிட்டார்கள். இந்திய தேசத்தின் நலனுடன் இதனைத் தொடர்பு படுத்தி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தவறாக கணித்து விட்டார்கள்.

★ பலஸ்தீனத்தில் நடக்கும் விடுதலைப் போராட்டத்தை, உலகத்தில் உள்ள முஸ்லீம்கள் அனைவரும் ஆதரிக்கிறார்கள் - உதவிகளை வழங்குகிறார்கள்.

★ அயர்லாந்தில் நடக்கும் விடுதலைப் போராட்டத்தை - அமெரிக்காவின் நேசநாடான இங்கிலாந்துக் கெதிராகப் போராடும் அயர்லாந் துப் போராளிகளை, அமெரிக்காவில் வாழும் ஐரிஸ் மக்கள் ஆதரிக்கிறார்கள.

★ ஒடுக்கப்படும் தென்னாபிரிக்க கறுப்பர் களுக்காக உலகின் எல்லாக் கறுப்பர்களும் குரல் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு இனத்தவனும் எங்கோ ஒரு மூலையில் பாதிக்கப்படும் பொழுது அந்த இனத்தவர்கள் அதற்காக குரல் கொடுக் கிறார்கள். ஆனால் மிக அருகில், இருபதுமைல் கடல் நீரால் பிரிக்கப்பட்டிருக்கும் தமிழீழத்தில் ஒரு உன்னதமான, அர்ப்பணங்களுடன் கூடிய வீரஞ் செறிந்த விடுதலைப் போராட்டம் நடக்கும் பொழுது, தமிழக, அரசினர் உதவவில்லை. மாறாக ஆபத்தான இடையூறுகளைச் செய்து, விடுதலைப் போராட்டத்திற்கு தடையாக இருக்கிறார்கள்.

அன்பான தமிழ் நாட்டுச் சகோதரர்களே!

நாங்கள் ஆறு கோடித் தமிழர்கள் இந்தவுல கில் சிதறிப் போய் வாழ்கின்றோம் எம்மில் நாற்பது இலட்சம் தமிழர்கள் நடாத்துகின்ற விடுதலைப் போரின் வெற்றிக்காக, நாம் எல்லோரும் ஒன்றி ணைந்து உழைப்போம். தமிழர்களின் ஒன்றிணை வில்தான் தமிழர்களின் வாழ்வே இருக்கிறது.

இப்படிக்கு,

**தமிழீழச் சகோதரன்**

# மண்ணுக்காய்ச் சிந்தும் குருதிகள்

**3-11-1990, திருக்கோணமலை,**

இருள் விலகாத அதிகாலை நேரம்.

நிலாவெளி இராணுவ முகாமிலிருந்து கொத்திக் குளம் காட்டுப்பிரதே சத்தை நோக்கி சிங்கள இராணுவத்தினர் நகரத் தொடங்கினார்கள். இவர் களுக்குத் துணையாக வில்கம் விகாரை இராணுவ முகாமிலிருந்தும் இராணு வத்தினர் வந்துகொண்டிருந்தார்கள்.

நிலாவெளியிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினரை புலிகள், கொத் திக்குளத்தில் - காட்டைப் பிளந்து செல்லும் வீதியொன்றில் வழிமறித்துத் தாக்கினார்கள். அதே நேரம் நெடுங்கேணி (திருமலை) காட்டில் வைத்து, வில் கம் விகாரையிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் மீதும், புலிகள் ஒரு கடுமை யான தாக்குதலை மேற்கொண்டார்கள். அந்த இரண்டு காடுகளிலும் நீண்ட நேரமாகப் போர் நிகழ்ந்தது. முடிவில் சிறிலங்காப் படைகள் உலங்கு வானூர்திகளின் உதவிகளுடன் பின்வாங்கிச் சென்றார்கள். இந்தச் சண்டை யில் லச்சுமணன் படுகாயமடைந்தான். கணேஸ் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டான்.

அடுத்த நாள் காலை, திருமலை எங்கும் நிறைந்துபோய் இருக்கும் இராணுவ முகாம்கள் பலவற்றில் இருந்து, சண்டை நடந்த இடத்தை நோக்கி படையினர், முன்னேறிவரத் தொடங்கினார்கள். முற்பகல் நேரம், நெடுங் கேணிக் காட்டுப் பிரதேசத்தில் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே கடுமையானதொரு யுத்தம் தொடங்கியது.

இராணுவத்தினரை நோக்கி எமது போராளிகள் முன்னேறத் தொடங்கி னார்கள். கனகு தன்னுடைய துப்பாக்கியை இயக்கியபடியே எதிரியின் எல் லைக்குள், எதிரிக்கு அருகில் சென்றுவிட்டான். அந்நேரம் எதிரி சிந்திய துப்பாக்கி ரவை ஒன்று கனகுவைத் தாக்கியது. சண்டை நடந்து கொண்டி ருந்தது. கனகுவால் திரும்பி வர முடியவில்லை, புலிகளின் முழுத் துப்பாக்கிகளும் கனகுவை மீட்பதற்காகப் போராடியது. இராணுவத்தினரால் தலைதூக்க முடியவில்லை. ஆனால் எமது தோழர்களாலும் முன்னேற முடியவில்லை. கனகு உறுதியாக - எதிரியை நோக்கித் துப்பாக்கியை இயக்கி னான் - முன்னேறிவந்த இரண்டு இராணுவத்தினர் வீழ்ந்தனர். ஆனால் மேலும் ஒரு துப்பாக்கி ரவை கனகுவின் உடலில் விழுந்தது. தன்னுடைய மரணத்தை கனகு உணர்ந்து கொண்டான். தான் பிறந்து, வாழ்ந்த மண்ணில் தன் உயிரற்ற உடலும் போராட வேண்டும் என அவன் விரும்பினான். தனது கை எறிகுண்டின் பாதுகாப்பூசியை கழட்டி குண்டை தனது வயிற்றுக்கு அடியில் வைத்தான். சயனைற் குப்பியை அவனது நா சுவைத்தது.

போர் தொடர்ந்து கொண்டிருந்தது.

முதல் நாள் சண்டையில் ஏற்பட்ட காயத்தின் வேதனையால், லச்சுமணன் முனகிக் கொண்டிருந்தான். துப்பாக்கிகளின் வேட்டோசைகள் மிகவும் அருகில் கேட்கத் தொடங்கியது. நிமிர்ந்தான்..., சற்றுத் தள்ளிக்கிடந்த அவனது ஏ.கே. 47 துப்பாக்கியையெட்டி எடுத்தான்.

லச்சுமணன் எழுந்து எதிரியை நோக்கி நடந்தான் - அவனது ஒவ் வொரு காலடியும் உறுதியாகப் பதிந்தது. இராணுவத்தினர் சுட்டுக்கொண்டே முன்னேறினார்கள். அதே நேரம் லட்சுமணனின் துப்பாக்கியும் எதிரியை நோக்கி ரவைகளைக் கக்கத் தொடங்கியது. அந்தத் துப்பாக்கியின் ஓசை நீண்ட நேரமாகக் கேட்டு ஓய்ந்தது. போர் தொடர்ந்தது, முன்னேறி வந்த இரா ணுவ வெறியர்கள் குப்புறக்கிடந்த கனகுவின் உடலை நிமிர்த்தினர் - குண்டு பலத்த ஓசையுடன் வெடித்தது - அதில் நான்கு இராணுவத்தினர் படுகாய மடைந்து விழுந்தனர்.

முடிவில், மேலும் முன்னேற முடியாமல் படையினர் பின்வாங்கிச் சென் றார்கள். ஆனால் லச்சுமணனின் முகம் அவனுடைய துப்பாக்கியை அணைத்த படியேதன் நிலத்தை நோக்கிக் கிடந்தது.

மறுநாள், மாலை 5 மணியளவில், ( 5 . 11 . 1990 )

லெப். கனகு (மேன்காமம், மூதூர்), 2-வது லெப். கோணேஸ் (நிலாவெளி), லச்சுமணன் (கங்குவேலி, மூதூர்), கணேஸ் (புதுக்குடியிருப்பு, தம்பலகாமம்) ஆகிய எமது வீரமரணமடைந்த வேங்கை களை சுற்றி புலிகள் அணிவகுத்து நின்றனர்.

நேற்று இவர்களின் கைகளில் தவழ்ந்த ஆயுதங்கள் இன்று புதியவர் களின் கைகளில் இருந்தது. இன்றும் தமிழீழ தாயகம் என அவை மேலெ ழுந்தன.

# தமிழீழ மீட்பு நிதி— மீளச்செலுத்தப்படுகின்றது!

சிங்கள பேரினவாத பூதத்திடமிருந்து தமிழீழத்தை மீட்பதற்காக இதுவரை இரண்டாயிரத்து ஐநூறு புலி வீரர்களும், வீராங்கனைகளும் தமது உயிர்களை அர்ப்பணித்துள்ளார்கள். பல்லாயிரக்கணக்கான புலிகள் வீரமுடன் போர்க்களத்தில் நிற்கின்றார்கள்.

தமிழீழ மண்ணை நேசிக்கின்ற, அதன் விடுதலையை எதிர்பார்த்து நிற்கும் இலட்சக்கணக்கான மக்கள், சிறீலங்கா அரசின் இராணுவ, பொருளாதார வகையிலான, தாங்கொணாத பல்வேறு கொடுமைகளையும் தாங்கி, மண்மீட்புப்போரில் தங்களது பங்களிப்பையும் செலுத்தி வருகின்றார்கள்.

தமிழீழ மண்ணைக் கபளீகரம் செய்து, தமிழீழ மக்களை நிரந்தர அடிமைகளாக்க கங்கணங்கட்டிநிற்கும் சிங்கள அரசு, அதற்கான முயற்சிகளை முனைப்புடன் முன்னெடுத்து வருகின்றது.

விடுதலைப் போரை விரும்பாத சர்வதேசசக்திகளிடமிருந்து பெருந்தொகையில் நிதியையும், ஆயுதத்தையும் பெற்று வருகின்றது.

தமிழ் இன அழிப்பிற்காகவே ''தேசிய பாதுகாப்பு நிதி'' என்ற பெயரில் பல கோடி ரூபாய்களை உள்நாட்டிலேயே சேகரித்து வருகின்றது.

சிறீலங்கா முப்படைகளின் கூட்டுத் தளபதி கூட தெருத்தெருவாக இறங்கி, நிதி திரட்டி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கணிசமான சிங்களமக்களும் இந்த தமிழ் இன அழிப்புக்கு நிதிகளை வாரிவழங்கி வருகின்றார்கள்.

தமிழ் அரச ஊழியர்களின் சம்பளத்திலிருந்தும் இந் நிதிக்கு கட்டாய அறவீடுகளைச் சிறீலங்கா அரசு மேற்கொண்டுவருவதுடன், கொழும்பிலுள்ள தமிழ் வர்த்தகர்களிடமிருந்தும் பெருமளவு நிதியை பெற்றுவருகின்றது.

தமிழ் இனத்தை அழிக்க, தமிழ் மண்ணை அடிமை கொள்ள தமிழர்களிடமிருந்தே சிங்கள அரசு பெருமளவு நிதியைத் திரட்டுகின்றது.

இந்த நிதிகளைக் கொண்டு நவீன ஆயுதங்களையும் - வெடிமருந்துகளையும், போர் விமானங்களையும் கொள்வனவு செய்து, தமிழீழ மக்களுடன் ஒரு போரை நடாத்துகின்றது.

இந்நிலையில் — எதிரிக்கு நிகராக — எமது விடுதலைப் போரை மேலும் நவீன மயப்படுத்தி, தமிழீழத்தை மீட்பதற்காக எமது இயக்கத்திற்கு பெருமளவு நிதி தேவைப்படுகின்றது. அந்த நிதியை தமிழீழ மக்களிடமிருந்துதான் நாம் பெறமுடியும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக தமிழீழ மீட்புநிதி என்ற பெயருடைய கடன் திட்டத்தை அமுல்படுத்துகின்றோம்.

குடும்பத்திற்கு இரண்டு பவுண் தங்கம் அல்லது பத்தாயிரம் ரூபா பணம் என்ற அடிப்படையில் வசதியுள்ள குடும்பங்களிடமிருந்து நிதியைப் பெறுகின்றோம்.

இத்திட்டமானது எமது விடுதலைப் போருக்கான நிதியை நாம் பெறுவதற்கும், தமிழ்மக்கள் அனைவரும் எமது போராட்டத்தில் இணைந்து கொண்டு ஏதோ ஒரு விதத்தில் தமது பங்களிப்பைச் செய்வதற்கும் உதவுகின்றது.

பெறப்படும் தங்கம் அவர்கள் தந்த நகையின் மாற்றுடன் (Carat) 2 மாற்று அதிகமாக உள்ள புலி இலட்சனை பொறித்த தங்க நாணயமாக வழங்குவதன் மூலம் நாம் பெற்ற தங்கத்தை மீளளிப்பது என்ற உறுதி மொழியையும் மக்களுக்குவழங்கியிருந்தோம்.

அதன்படி முதலில் 27.11.1990 மாவீரர் நாளிலும், இரண்டாங் கட்டமாக 14.01.1991 தைப்பொங்கல் தினத்தன்றும் நூறு, நூறு கடன் பத்திரதாரர்களுக்கு தங்கத்தை மீளளிப்புச்செய்தோம், தொடர்ந்தும் மாதாமாதம் மீளளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இதுவரை தங்கத்தை மீளப் பெற்றுக் கொண்டவர்களில் பலர், நாம் கொடுத்த தங்க நாணயத்துக்குச் சமனான நகையை நன்கொடையாகத் தர முன்வந்தார்கள்.

புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட — மீளக்கையளிக்கப்பட்ட — தங்கத்தை தான் ஒரு பொக்கிசமாகப் பயன்படுத்தப் போவதாக கூறிய ஒரு மூதாட்டி உடனடியாகவே இரண்டுபவுண் தங்கத்தை அன்பளிப்பாக இயக்கத்துக்கு வழங்க விருப்பம் தெரிவித்தார்.

இந்தச் செயல் மீளளிப்பு நிகழ்ச்சியில் பங்கு கொண்டிருந்த மக்களையும் போராளிகளையும் உணர்ச்சி கொள்ள வைத்தது.

## மாணவர்களின்.....

[ 1 ஆம் பக்கத் தொடர்ச்சி ]

ஊர்வலம் நகர்ந்தது. எழுப்பப்பட்ட கோசங்களில் பெரும்பாலானவை, தென்தமிழீழ மாணவர்களின் அவலநிலை தொடர்பானதாகவே இருந்தது.

மதியம் 11. 00 மணியளவில் ஊர்வலம் கோண்டாவில் புகையிரதக் கடவையை வந்தடைந்ததும், பலாலி இராணுவ முகாம் பக்கமிருந்து வந்த உலங்குவானூர்தியொன்று ஊர்வலத்தைக் கண்டுவிட்டு அதைச் சுற்றி பல தடவைகள் வட்டமிட்டு மிரட்டியது. அதையும் துணிச்சலுடன் எதிர்கொண்டபடி ஊர்வலம் தொடர்ந்தது.

அதே நேரம் வானத்திலிருந்து ஊர்வலத்தை நோக்கி ஒரு பொட்டலம் போடப்பட்டது. அது வெடிகுண்டாக இருக்கலாம் என ஒரு பரபரப்பு ஏற்பட்டது. இருந்தாலும் எந்தப் பதட்டமும் இன்றி ஊர்வலம் சென்றது. (சிறிது நேரத்திற்குப் பின்னர் விழுந்தது துண்டுப் பிரசுரக்கட்டு என்பது தெரிய வந்தது)

பொதுச் சந்தைகள் மீதும், மக்கள் கூடும் இடங்கள் மீதும், பாடசாலைகள் மீதும் கூட விமானக் குண்டுவீச்சு நடாத்தப்படும் இந்தச் சூழ்நிலையிலும் மிகப்பெரியதொரு பேரணியை ஒழுங்கு செய்து நடாத்தி முடித்திருக்கின்றார்கள்.

மாணவர்களின் இத் துணிச்சலான போராட்டத்தைக் கண்டு வியப்பும் பெருமிதமும் அடைந்த மக்கள், பேரணி சென்ற வீதியின் இருமருங்கிலும் குழுமிநின்று மாணவர்களை உற்சாகப்படுத்தினார்கள்.

இந்த ஊர்வலத்தையும், அதில் பங்குபற்றியிருந்த மாணவ — மாணவியினரையும் பார்க்கும்போது தமிழீழத்தின் மாணவ சமுதாயம் தனது உரிமையைப் பெறுவதற்கு இரத்தம் சிந்தி போராடவும், அர்ப்பணிப்புக்களைச் செய்யவும் தயாராக இருப்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இன்று, தமிழீழ மாணவர்கள் தங்களுடைய கல்வியடக்குமுறைக்கு எதிராக மட்டுமல்ல தற்போதைய கல்வியமைப்பில் இருக்கும் பாரிய குறைபாடுகளையும், பிற்போக்குத்தனமான அம்சங்களையும் இனங்கண்டதுடன். தீர்வுகளையும் நாடிநிற்கும் மனோநிலையில் உள்ளனர்.

வெறும் புத்தகப் பூச்சிகளாக இருப்பதைப் படித்து, சொல்வதைக் கேட்டு வந்த மாணவ சமுதாயம், இன்று பெருமளவு மாறி ஒரு புரட்சிகர மனோநிலை கொண்ட போராட்ட சக்தியாக பரிணாமம் பெற்றுள்ளது. எழுச்சி நிலையில் இருக்கும், எமது விடுதலைப் போராட்டம் மாணவர்களது மனோநிலைகளிலும், சிந்தனைகளிலும் பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது.

இன்று அவர்களிடம் முற்போக்கான சிந்தனைகள் முளைவிடத் தொடங்கிவிட்டன. புரட்சிகர மாற்றங்களை வேண்டிநிற்கத் தொடங்கிவிட்டனர். இதன் காரணமாக மாணவர்கள் மத்தியில் போர்க்குணம் மேலோங்கியுள்ளது.

அடக்குமுறைகளுக்கு எதிராக அணிதிரண்டு குரல் கொடுக்க வீதிக்கு வரத் துணிந்ததைப்போன்று. சுதந்திரத்தைப்பெற ஆயுதந் தாங்கிப் போராடவும் பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் பாசறை புகத் தொடங்கிவிட்டார்கள். இது எமது விடுதலைப் போராட்டத்தில் தெளிவாக இனங்கண்டு கொள்ளக் கூடிய மாணவர்களின் எழுச்சி நிலையாகும்.

## ஒரு போரா...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகைச் செய்தி கூறுகிறது. மாங்குளம் முகாம் தகர்க்கப்படுகின்றது. பெண் போராளிகள் உட்பட பல போராளிகள் வீரமரணம். இன்னும் சில மணி நேரங்களின் பின் மாங்குளம் முகாம் பூரணமாக புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடும். ஆம், ஆர்வத்தோடு வினவுகின்றோம். பெண் போராளிகள் எப்படிப் போராடினார்கள்? வியத்தகு பங்குவகித்ததாக எல்லோரும் பாராட்டினார்களே.

டோறா என்ன செய்தாள், பத்துப் பெண் போராளிகளின் தாக்குதல் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கிச் செல்கிறாள். இராணுவத்தின் குறிப்பிட்ட காவலரண்களைத் தாக்கியழிக்கும் பொறுப்பை ஏற்கிறாள். எதிர்பார்த்த நேரத்துக்கு முன்பாக தாக்குதல் இலக்கை 20 நிமிடங்களில் அடைகின்றாள். இராணுவ காவல் அரணுக்கு மிக அண்மையிலிருந்து தாக்குதலை நடாத்துகின்றனர். வீராவேசத்தோடு தனது குழுவுக்கு கட்டளை பிறப்பித்துப் போர் புரிந்து கொண்டிருந்த டோறா காலில் துப்பாக்கி ரவையை வாங்கிக் கொண்டாள். இருப்பினும் பின்வாங்கவில்லை. தொடர்ந்து சண்டையிடுகிறாள் மீண்டும் கைக்குண்டின் சிதறல் ஒன்று வயிற்றைப் பதம் பார்க்கின்றது. ஆசைக்கு நகர்ந்து இன்னும் இன்னும் முன்னுக்குச் சென்று எதிரியைத் தாக்கி அழிக்க முடியவில்லை. துணைக்குழுவை அழைக்கின்றாள். அதுதான் அவளின் கடைசிச் சக்தியாக இருக்க வேண்டும்......

இப்பொழுது சத்தம் எதையும் காணவில்லை. ஆம் டோறா இறந்துவிட்டாள். தன் இலட்சியப் பாதையில் முழுவதுமாக தன்னைக் கொடுத்து விட்டாள். அவளின் செல்லப் பிள்ளைகளும், அவள் நேசித்த, அவளுடன் ஒன்றாக இருந்த பல பெண் போராளிகளும் அவளோடு சேர்ந்து சென்றுவிட்டார்கள். அவள் மீட்டிய விடுதலை இராகங்களும், எமது மனங்களுக்கு இதம்தரும்; எங்களை சிரிக்கவைக்கும் அவளின் குறும்புத்தனங்களும், எமது நெஞ்சங்களை அழுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவளின் இலட்சிய வெறி ஓயாது அதைக் கருத்தாக்கி எம்மை அவளின் பின்னால் இழுத்துச் செல்கின்றது.

— மாலினி —

'' புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் ''

## சாதியமும்...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகளும் சாதிய அமைப்பின் அடித்தளத்தில் ஒரு பெரிய உடைவை ஏற்படுத்தியிருக்கின்றது. இது சமூகத்தின் உணர்வுகளிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

இன்று, சாதி குறித்துப் பேசுவதோ, செயற்படுவதோ- குற்றமானது என்பதைவிட- அது வெட்கக்கேடானது, அநாகரீகமானது என்று கருதும் ஒரு மனப்பாங்கு எமது சமூகத்தில் உள்ளது.

இது சாதியம் தொடர்பாக காலம் காலமாக இருந்துவந்த, சமூக உணர்வில் ஏற்பட்ட பிரமாண்டமான மாற்றமாகும்.

இருந்தாலும் சாதியப்பேயை எமது சமூகத்திலிருந்து முற்றாக ஓட்டிவிடமுடியவில்லை சாதிய வழக்குகள் இருக்கத்தான் செய்கின்றன. சாதிய வெறியர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். சாதியப் பிரச்சனைகளையும் நாம் சந்திக்கத்தான் செய்கிறோம்.

காலம் காலமாக எமது சமூகத்தில் வேரூன்றி வளர்ந்து மக்களின் ஆழ் மனதில் புரையோடிவிட்ட ஒரு சமூக நோயை எடுத்த எடுப்பில் குணமாக்கிவிடுவதென்பது இலகுவான காரியமல்ல. அப்படி நாம் அவசரப்பட்டு சட்டங்கள் மூலமாகவோ, நிர்ப்பந்தங்கள் வாயிலாகவோ சாதியப் பேயை விரட்ட முனைவதும் புத்திசாலித்தனமானது அல்ல.

இன்றைய நிலையில் இந்தப் பிரச்சனைகளை நாம் இவ்விதமாகப் பார்க்கலாம்.

உயிர் வாழ்வுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களில் சாதிவெறி காட்டி, அடக்கப்பட்ட மக்களைச் சாவின் விளிம்புக்கு இட்டுச் செல்ல வைத்தல். இது கொடூரமானது. அனுமதிக்க முடியாதது.

மற்றையது, சாதிரீதியான ஏனைய முரண்பாடுகள். இவற்றை அதனதன் தன்மைகளுக்கேற்றவிதத்தில் பல்வேறு அணுகுமுறைகள் மூலம் கால ஓட்டத்தில் செயலிழக்கச் செய்யலாம்.


புலிகளின் விடுதலைப் போராட்டமும், அதனால் எழுந்த புரட்சிகர புறநிலைகளும் சாதிய அமைப்பை தகர்க்கத் தொடங்கியிருக்கிறது. எனினும் பொருளாதார உறவுகளிலும், சமூகச் சிந்தனைகளிலும் அடிப்படையான மாற்றங்கள் நிகழாமல் சாதியம் முற்றாக ஒழிந்துவிடப்போவதில்லை. எனவே சாதிய ஒழிப்புக்கு சமுதாயப் புரட்சியுடன் மனப்புரட்சியும் அவசியமாகிறது.

பொருளாதார சமத்துவத்தை நோக்கமாகக் கொண்ட சமுதாயப் புரட்சியை முன்னெடுப்பது விடுதலைப் புலிகளின் அடிப்படையான கொள்கைத் திட்டமாகும். தேசிய விடுதலையை பெற்று, ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னரே இந்தக் கொள்கைத் திட்டத்தைச் செம்மையாக செயற்படுத்தமுடியும். ஆயினும் விடுதலைக்கு முந்திய காலத்திலிருந்தே கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் புரட்சிகரமான பொருளாதார திட்டங்களைச் செயற்படுத்தி, கூட்டுத்தொழில் முயற்சிகளை அமுல்படுத்தி, சாதிய உறவுகளை படிப்படியாக உடைத்தெறிவது சாத்தியமானதொன்று.


சமூகச் சிந்தனையில் அடிப்படையான மாற்றத்தைக் கொண்டுவருவது சாதிய ஒழிப்புக்கு அத்தியாவசியமானது. ஏனெனில் சாதிய வழக்குகளும், சம்பிரதாயங்களும் மூட நம்பிக்கைகளில் தோற்றம் கொண்டிருக்கிறது. இந்த அறியாமையைப் போக்க மனப் புரட்சி அவசியம். மன அரங்கில் புரட்சிகரமான விழிப்புணர்வு ஏற்படுவது அவசியம். இங்குதான் புரட்சிகரக் கல்வி முக்கிய இடத்தைப் பெறுகிறது.

எமது இளம் பரம்பரையினருக்கு புரட்சிகரக் கல்வி போதிக்கப்பட வேண்டும். பழைமையான பிற்போக்கான கருத்துகள், கோட்பாடுகள் மூடநம்பிக்கைகளிலிருந்து விடுபட்டு, புதியமுற்போக்கான உலகப் பார்வையை புதிய இளம் பரம்பரையினர் பெற்றுக்கொள்ள வேண்டும். அறியாமை இருள் நீங்கி புதிய விழிப்புணர்வும், புரட்சிகர சிந்தனைகளும் இளம் மனங்களைப் பற்றிக்கொண்டால் சாதியம் என்ற மன நோய் புதிதாகத் தோன்றப் போகும் புரட்சிகர சமுதாயத்திலிருந்து நீங்கிவிடும்.

# வீர வணக்கம்



லெப். கோபிநாத்
செட்டிகுளம்.




மேஜர் வசந்த்
(வி. விஜயதேவா)
நறுவிலிக்குளம்.
29-01-1970

**21-6-90 ல் கொண்டச்சி மரமுந்திரிகைப் பண்ணை சிங்கள இராணுவ முகாம் தகர்ப்பில் வீரமரணமடைந்த எமது 12 தோழர்களை நினைவு கூருகின்றோம்.**




கப்டன் தனபால்
(சிறிரங்கநாதன்)
பூநகரி.
22-07-1967




சுமித்திரன்
(ராஜன்)
தலைமன்னார்.
07-04-1964



லெப். சுப்பிரமணி
(சுப்பிரமணியம்)
பரப்புக்கடந்தான்
31-06-1971




சாந்தா
(கண்ணன்)
தலைமன்னார்.
17-08-1969




பயஸ்
மயிலிட்டி.

குவேந்திரன்
யாழ்ப்பாணம்.

ரமணி
மட்டக்களப்பு.



மேனன்
(சத்தியமூர்த்தி)
பரப்புக்கடந்தான்.
19-11-1968



டிக்கன்ஸ்
(சர்வேசன்)
உயிலங்குளம்.
01-01-1974

புலிப்படை வீரர் புயலாய் எழுந்தனர்
எதிர்ப்படை எரிய எரிமலை ஆகினர்
சிங்களப் படைமுகாம் கொண்டச்சி வீழ்ந்தது
வெங்களம் மீதிலோர் காவியம் பிறந்தது.
பாதையில் பன்னிரு மலைகள் சரிந்தன
பாதியில் பயணம் நின்று விடாது
போரினில் மாண்ட புலிகளின் நினைவில்
தோளினில் நாங்கள் துவக்கினைத் தூக்குவோம்.



பஞ்சன்
(கிறிஸ்ரியன் ராஜன்)
மாலிகைப்பிட்டி.
29-01-1967

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**